விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 02 வியாழக்கிழமை (16.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 148

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வித சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

## குழப்பத்தில் ஜனாதிபதி

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதா அல்லது அதனை நடத்தாமல் விடுவதா என்ற திண்டாட்



டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளார் என தேசிய சோஷலிசக் கட்சி தலைவர் சிறிதுங்க (20ஆம் பக்கம் பார்க்க)

# வடக்குத் தேர்தலை மட்டுமே செப்ரெம்பரில் நடத்த ஏற்பாடு

## தகவல்கள் கசிவு

(கொழும்பு)

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கும் ஒரேநாளில் தேர்தல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் வடக்கு தேர்தலை மட்டும் செப்ரெம்பா மாதம் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

முதலமைச்சர்களின் வேண்டுகோள்களின் அடிப்படையில் பதவிக்காலம் முடிவதற்கு ஒருவருடத்திற்கு முன்பதாகவே வடமேல் மற்றும் மத்திய ஆகிய இரு மாகாண சபைகளை கலைப்பதற்கு ஆளுநர்கள் நடவடிக்கைகளை எடுப்பர் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதியின் கட்டளைக்கு பின்னரே வட மாகாணசபைத்தேர்தலை நடத்தமுடியும். அதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தலை ஜனாதிபதி அடுத்த மாதம் முற்பகுதியில் தேர்தல்கள் ஆணையாளருக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என்று அரச தரப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.

அவ்வாறான உத்தியோக பூர்வ அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் செப்ரெம்பர் முதல் வாரத்தில் வட மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய இரு மாகாண சபைகளின் தேர்தல்களையும் (20ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணை வேண்டும்

## ஐ.நாவை வலியுறுத்தியது சர்வதேச மன்னிப்புச் சபை

(கொழும்பு)

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிடம் எழுத்து மூலம் மீண்டும் கோரியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 23ம் அமர்வுகள் எதிர்வரும் 27ம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது அரசாங்கப் படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சர்வதேச சட்டங்களை மீறிச் செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாகவும் அவை தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சாவதேச தர நிாணயங்களுக்கு அமைவான முறையில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டால் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகளில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென (20ஆம் பக்கம் பார்க்க)



மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நேற்று புதன் கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இதில் பிரதான எதிாக்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் பலரும், தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களும் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றுள்ளதை படத்தில் காணலாம்.

## நாட்டில் பிரிவினைவாதத்தை வடக்குத் தேர்தல் உருவாக்கும்

### ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வட மாகாணசபைத் தேர்தல் நடத்துவதன் மூலம் பிரிவினைவாதம் உரு வாகும் என ஜே.வி.பி. குற்றம் சுமத்தியுள்ளது.

வட மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதனை விரும்பவில்லை என ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு 13ம் திருத்தச் சட்டம் சிறந்த தீர்வாக அமையாது என அவா சுட்டிக் காட்டியுள்ளார்.

சகல இன மக்களையும் ஒரே விதமாக பார்க்கக் கூடிய ஓர் (20ஆம் பக்கம் பார்க்க)

## காணி சுவீகரிப்பிற்கு எதிராக நீதிமன்றில் மனுத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

காணி சுவீகரிப்பிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 1474 பேர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனா். சட்ட விரோதமாகவும் நீதிக்குப் புறம்பான வகையிலும் காணிகள் சுவீகரிக்கப்படவுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் 2000 பேர் மேன்முறையீடு செய்ய உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட (20ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரம் இல்லாத தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடாது

### மனோ கணேசன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசுக்குள் இருக்கும் தீவிரவாதிகள் கூப்பாடுபோடுவதை காட்டி வட மாகாண சபை தேர்தலை நடத்



தும் முன்னா 19ஆம் திருத்தத்தை கொண்டு வந்து காணி, பொலிஸ் அதிகாரங்களை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது. ஆனால காணி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் நடத்தப்படும் வட (20ஆம் பக்கம் பார்க்க)

# காணி சுவீகரிப்பு அதிகாரி திடீரென இராஜினாமா!

## அதிக அழுத்தம் காரணமா?

(யாழ்ப்பாணம்)

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் யாழ்.மாவட்ட செயலகத் தின் அலுவலகத்தில் காணி சுவீகரிப்பு அதிகாரியாகப் பணிபுரிந்த முன்னாள் வடக்கு மாகாண பிரதம செயலாளா் ஆ.சிவசுவாமி உத்தியோகபூர்வமாக பதவி விலகியுள்ளாா்.

தனது பதவியை இராஜினாமா செய்வதாக அவரினால் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைகைகப்பட்டுள்ளது.

இதனை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபா் சுந்தரம் அருமைநாயகம் உறுதிப்படுத்திய அதேவேளை காணி சுவீகரிப்பு அதிகாரியின் வேண்டுகோளை அமைச்சு ஏற் (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயங்கரவாதத்தின் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களே!

## ஜனாதிபதி மகிந்த உகண்டாவில் தெரிவிப்பு

(கம்பாலா)

பயங்கரவாதத்தின் முதல் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களாக இருந்தன. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உயிரூட்டுவதே எங்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அதற்கே முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது என்பதுடன் பயங்கர வாதத்தின் செயற்பாட்டினால் யாழ்.மேயரே முதலாவதாக பலியாகினார் என்பதனை ஞாபகமூட்டுவதற்கு விரும்புகின்றேன் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உகண்டாவில் நடைபெற்ற பொதுநலவாய உள்ளூர் ஆட்சி மாநாட்டில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். 2013 பொது நலவாய உள்ளூர் ஆட்சி மாநாடு உகண்டாவிலுள்ள கம்பாலாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் அபிவிருத்தியுடனான உள்ளூராட்சி அபிவிருத்தியில் உள்ளூராட்சிக்கு முக்கிய இடத்தை வழங்குதல் என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி உரையாற்றினார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஜனநாயக விழுமியங்களை எடுத்தியம்புவதற்கு உள்ளூர் ஆட்சிமுறையையே நடைமுறைப்படுத்தி வந்துள்ளனர். கி.மு.4 ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகவே அபிவிருத்தி மக்களை நேரடியாக சென்றடைகின்றது. அது நடைமுறைச் சாத்தியமானதும் ஆக்கபூர்வமானதுமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனது அபிப்பிராயத்தின் பிரகாரம் ஒரு குறிப்பிட்ட அளவு அரச தலையீடும் சமமான பங்களிப்பையும் சகலருக்கும் போய்ச் சேருவதை உறுதிப்படுத்தி இருப்பது அவசியமானதாகும்.

இன்றைக்கு இருபத்தி எட்டு வருடங்களுக்கு முன்பு இதேபோன்று ஒரு நாளில் தான் 146 அப்பாவி பொதுமக்கள் ஸ்ரீ மகா போதிக்கு அண்மையில் பயங்கரவாதிகளினால் கொல்லப்பட்டனர் என்றும் அதைப்பற்றி பேசுவதற்கு ஒரு மனித உரிமைகள் இயக்கம் அன்றில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் ஆட்சியே பயங்கரவாதிகளின் முதலாவது இலக்காக இருந்தது. இலங்கையில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த உடன் முதலாவதாக உள்ளூர் ஆட்சியையே வழமைக்கு கொண்டு வந்து பொருளாதார அபிவிருத்தியை மேற்கொண்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தின் முதல் இலக்கு உள்ளூராட்சி மன்றங்களாக இருந்தன. வடக்கில்,யாழ்ப்பாண மேயர்தான் பயங்கரவாதத்தின் முதலாவதாக தாக்குதலில் உயிரிழந்தவர் என்பதனை ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். நிரந்தர சமாதானமும் பொருளாதார ஸ்திரத் தன்மையும் இரண்டு தூண்களாக நின்று இலங்கையின் துரித பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு வித்திட்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (எ-11)

# நீதியரசர்கள் மூவர் பங்கேற்கவில்லை

உயர்நீதிமன்ற புதிய நீதியரசர் பதவியேற்பு நிகழ்வில் மூன்று நீதியரசர்கள் கலந்து கொள்ளவில்லை.

நீதித் துறைக்கும் உத்தியோக பற்றற்ற சட்டத்தரணிகள் சங்கத்திற்கும் இடையில் கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் உள்ள நிலையில் புதிதாக நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதியரசர் ரோகினி மாரசிங்கவின் வைபவ ரீதியான அமர்வின் போது மகத்தான வரவேற்பு நேற்று புதன்கிழமை அளிக்கப்பட்டது.

எனினும் இந்த அமர்வில் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் 10 பேரில் ஆர்.ஏ.என் காமினி அமரதுங்க, சந்திர ஏக்கநாயக்க மற்றும் ஈவா வணசுந்தர ஆகிய மூன்று நீதியரசர்களும் கலந்து கொள்ளவில்லை.

நீதியரசர் எஸ்.ஐ. இமாம் ஓய்வு பெற்றதை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான ரோகினி மாரசிங்க உயர் நீதிமன்ற நீதியரசராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டார். (எ-11)




# கார்ட்டூனை பார்த்து கவலைப்படும் அமைச்சர்கள்

பத்திரிகைகளில் வெளியாகும் கார்ட்டூன்களில் அமைச்சர்கள் திருடர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் காட்டப்படுவதாக இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

எனினும் நல்ல அமைச்சர்கள் பலரும் அரசாங்கத்தில் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மாத்தறையில் இடம்பெற்ற பொது வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எல்லா இடத்திலும் மோசடிக்காரர்கள் இருப்ப தாகவும் ஆனால் அவ்வாறில்லாதவர்களும் இருப்பதாகவும் ஒரே கண்ணோட்டத்தில் அனைவரையும் பார்க்கக்கூடாது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு குழந்தைகளுக்கு முன்னுரிமை வழங்குவதாகவும் இதுவே இவ்அரசு மற்றைய அரசாங்கங்களிலிருந்து வேறுபடுகின்றமைக்கான முக்கிய காரணம் எனவும் டலஸ் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# தொண்டர்களுக்கு ஆட்சேர்ப்பு

யாழ் போதனா வைத்தியசாலையில் சேவை புரிவதற்கு சென் ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதில் இணைந்து சேவையாற்ற விரும்பும் க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் சித்தியுடன் அதில் இரண்டு திறமைச் சித்தி உடைய 18-30 வயதிற்கிடைப்பட்ட ஆண்கள் எதிர்வரும் 18.05.2013 சனிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சென் ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சை உரிய ஆவணங்களுடன் சமுகம் தருமாறு சென் ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். மேலதிக விபரங்களுக்கு 0213214444 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (ஏ)

# அரச மொழிக் கொள்கை தொடர்பில் கனேடிய ஆணைக்குழு ஆராய்வு

## —பேரா.பாலசுந்தரம்பிள்ளை பங்கேற்பு—

(கொழும்பு)

கனேடிய அரச மொழித்திறன் ஆணைக் குழுவின் தலைவர் கிரகம் பிரேசர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது அரச மொழி அமுலாக்கம் தொடர்பில் தான்பெற்ற அனுபவங்களை நமது நாட்டு அரச மொழி அமுலாக்கத்துடன் ஒப்பிட்டு ஆராய்ந்து வருகிறார்.

இதன் ஒரு கட்டமாக நேற்று ஜனாதிபதியின் மும்மொழிக் கொள்கைச் செயலணியினருடன் அவர் கலந்துரையாடினார்.

இதன்போது அங்கு கருத்து தெரிவித்த யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை,

அரசகரும மொழி அமுலாக்கத்திற்கு ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகள் என்பன எந்தவித எதிர்ப்புக்களையும் தெரிவிக்கவில்லை.

இருந்தபோதிலும் அவை சாதாரண மக்களை சென்றடையவில்லை. தற்பொழுதும் தமிழ்மக்களுக்கு சிங்கள மொழியிலேயே கடிதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன என தெரிவித்தார்.

இதேவேளை இன்று பண்டாரநாயக்க சர்வதேச கற்கைகள் மையத்தில் முழுநாள் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது. (ஏ)

# சைக்கிள் திருடியவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கர வண்டியை களவாடிய நபரை எதிர்வரும் 28-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கரவெட்டிப் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் துவிச்சக்கரவண்டி ஒன்றை திருடிக் கொண்டு பளைப் பகுதியூடாக சென்று கொண்டிருந்த வேளை பளைப் பொலிஸாரால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட நபரை பளைப் பொலிஸ் நிலையத்தில் வைத்திருந்த பொலிஸார் நேற்று புதன்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர். வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த நபரை எதிர்வரும் 28-ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எ-3)

# அவுஸ். இல் இருந்து 30 பேர் திரும்பினர்

அவுஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 30 இலங்கையர்கள் விமானம் மூலம் தாயகம் திரும்பியுள்ளனர்.

அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 30 பேரே இவ்வாறு இலங்கை வந்தடைந்தனர்.

கே.எஸ்.வை 856 ரக விமானம் மூலமே அவர்கள் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் இலங்கை அரச புலனாய்வு பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# புத்தியை பாவிக்கும் நேரம் வடக்கு மக்களுக்கு வந்துள்ளது

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

வடக்கு மக்கள் தமது புத்தியை பாவித்து நடந்து கொள்ளும் காலம் வந்துள்ளதாக பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டால்,பல்வேறு அரசியல் கட்சிகள் மக்களை சந்தித்து,வாக்குகளை பெறுவதற்காக பல்வேறு பொய்யான உறுதிமொழிகளை வழங்குவர்.

வெளிநாடுகளிடமிருந்த கிடைக்கப் பெற்ற நிதியின் 85 சதவீதமானவை வடக்கின் அபிவிருத்திக்கே பயன்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனை பெற்றுத் தந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பதை வடக்கு மக்கள் மறக்கக்கூடாது.

இதன் காரணமாக வடக்கு மக்கள் புத்தியுடன் நடந்து கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தலைமன்னார் தொடருந்து பாதையை மதவாச்சியில் இருந்து மடு வரையும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ

வலம்புரி
விளம்பர தொடர்புகளுக்கு
தொ.பே. : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurii@yahoo.com,
valampuriijaffna@gmail.com

# தாய்லாந்துப் பிரதமர் இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் ஜிங்லுக் சினவற்ரா எதிர்வரும் 31-ம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வரும் அவர், ஜனாதிபுதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இருநாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு குறித்து கலந்துரையாடுவதுடன் இரு நாடுகளுக்கிடையிலான பல ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவார் என்றும் வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்யும் தாய்லாந்து பிரதமர் அங்கு வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் மகா நாயக்க தேரர்களையும் சந்தித்து கலந்துரையாடவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இலங்கை -தாய்லாந்து வணிக தலைவர்களுடனும் சலந்துரையாடலில் ஈடுபடுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக, கலையும் வடிவமைப்பும்
3-ம் வருட மாணவர்களின்
காண்பியக் கலைக்காட்சி
பிரவேசம் இலவசம்
கலைக்கூடம் -
கலைப்பீட புதிய கட்டிடத் தொகுதி, யாழ். பல்கலைக்கழகம்
16, 17, 18 /05/2013, காலை 10 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை
(2649)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞாபகம்

ஒரு நண்பர் யாருடனோ தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். கதைத்து முடிந்ததும் நான் அவரைப் பார்த்து, ''இப்போது தொலைபேசியில் கதைத்த இலக்கம் என்ன?'' என்று கேட்டேன்.

அவர் தலையை சொறிந்து கொண்டு ஞாபகம் வரவில்லை என்றார்.

''சரி சேர்! அதை விடுங்கள்... உங்கள் மனைவி பெயர் என்ன?'' என்று கேட்டேன்.

"மாலதி" என்று கூறினார்.

''என்ன சேர் இது வேடிக்கை... சற்று நேரத்திற்கு முன்னர் கதைத்த தொலைபேசி இலக்கம் மறந்து விட்டதாக கூறினீர்கள். எப்போதோ கல்யாணம் செய்த மனைவியின் பெயரை மறக்கவில்லை. அதை சரியாகச் சொல்லி விட்டீர்கள்'' என்றார்.

அவர் என்னை ஒரு மாதிரியாக பார்த்தார். அவர் அப்படி என்னை பார்த்ததிலே ஒன்றும் பிழையில்லை. ஏனென்றால்... நாம் எல்லோருமே அப்படித்தானே!

ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக தொலைபேசியில் கதைக்கிறோம். அதன்பின் கிடைக்கப் பெற வேண்டிய காரியம் முடிந்தவுடன் அந்த இலக்கம் நமக்கு அநாவசியமாகி விடும். அதனாலே மறந்து விடுகிறோம்.

இதற்குப் பெயர் தான் "தற்காலிக 'ஞாபகம்'' ஆகும். அதற்காக மனைவியினுடைய பெயரை மறக்க முடியுமா... அதை அடிக்கடி உபயோகப்படுத்துகிறோம்... அதனாலே மறப்பது கடினமாக இருக்கும்.

இதற்குப் பெயர்தான் "நிரந்தர ஞாபகம்''

தற்காலிக ஞாபகம் ஒரு மின்னல் மாதிரி தோன்றி மறையும். நிரந்தர ஞாபகம் ஒரு படிவம் போல மூளையிலே படிந்து விடும்.

ஒரே சம்பவத்தின் பல பிரதிகள் மூளையிலே பல்வேறு பகுதிகளிலேயும் படிவதனாலேயே... ஒன்று மறைந்தாலும் இன்னொன்று மறைவதில்லை.

இப்படிப்பட்ட நிலைமையிலேதான் "தொண்டையிலே இருக்கிறது... வாய்க்கு வரமாட்டேன் என்கிறது'' என்று கூறுவார்கள்.

ஒருவருக்கு எந்தத் துறையில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகமாக இருக்கிறதோ அதில் ஞாபகசக்தி அதிகமாக இருக்கும். தொலைபேசி நிலையத்தில் வேலை செய்பவருக்கு இலக்கங்கள் எல்லாம் நல்ல ஞாபகமாக இருக்கும்.

அதுமாதிரி கவிஞர்களுக்கு வார்த்தைகள் நல்ல ஞாபகமாக இருக்கும்.

ஒரு மூளை... எண்களை விட, எழுத்துக்களை விட படங்களை மிகவும் சுலபமாக ஞாபகத்தில் வைத்திருக்கும். உதாரணமாக, ஒரு பையனுக்கு படித்தது எதுவும் ஞாபகத்திலே இல்லையென்றால், அவன் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். மூளையைத் பொறுத்த வரைக்கும் ஞாபகசக்தி அதிகம் உள்ள மூளை; மறதியுள்ள மூளை அப்படியென்று ஒன்றும் கிடையாது. நினைவு வைத்துக் கொள்வதற்கு பயிற்சியளிக்கப்பட்ட மூளை, பயிற்சி அற்ற மூளை என்று சொல்லலாமா?

அதனாலே ஞாபக சக்தி என்பது நம்மிடம் இருக்கிற ஒருவகைப் பயிற்சி– எமது முயற்சியைப் பொறுத்துத் தான் அமையும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இலங்கை கடவுச் சீட்டை கொண்டுள்ள வெளிநாட்டவர்களும் வாக்களிக்கலாம்

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வாடகை வீடுகளில் குடியிருப்போருக்கும் வாக்களிக்கும் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அதனைத் தடுத்தல் என்பது சட்ட விரோத செயலாகும் என தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.அவர் தொடர்ந்து கூறுகையில்,

வாடகைக்கு குடியிருப்போர் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களின் பெயரையும் பதிவு செய்ய வேண்டும் என்று மேற்கொண்டு தேர்தல்கள்ஆணையாளர்வீட்டுரிமை தொடர்பில் வீண் சந்தேகங்களுக்கு இதில் இடமில்லை.

அத்தோடு வெளிநாடுகளிலிருந்து மீள இலங்கைக்கு வர இருப்பவர்களது பெயர்களை அவர்களது பெற்றோர் அல்லது உறவினர்கள் தேர்தல் இடாப்பில் பதிவு செய்ய முடியும். அவ்வாறு இலங்கை கடவுச் சீட்டு உள்ளவர்கள் அனைவரும் வாக்களிக்கத் த்குதியுடையவர்களாவர். அவர்கள் எமக்கு கடிதம் அனுப்பினால் அதற்குரிய கவனத்தை செலுத்துவோம். எனினும் வாக்களிப்பதற்கு அவர்கள் இங்கு வரவேண்டியது அவசியம்.தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபடும் நிரந்தர ஊடகவியலாளர்களுக்கும் தபால் மூல வாக்களிப்பிற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். இது தொடர்பில் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுக்கப்படுமானால் அது விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்படும்.

1931 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையரான எமக்கு வாக்குரிமை உள்ளது. ஆசியாவில் பல நாடுகளில் வாக்குரிமை இல்லாத காலத்திலும் எமக்கு வாக்குரிமை இருந்தமை பெருமை தருகிறது. இந்திய வம்சாவளி மக்களுக்கு வாக்குரிமை இல்லாதிருந்த போதும் 1989 ஆம் ஆண்டு புதிய சட்டமொன்று கொண்டு வரப்பட்டு அவர்களுக்கும் அந்த உரிமை வழங்கப்பட்டது.

இலங்கையில் இப்போது அனைவரும் வாக்குரிமையுடையவர்களாக உள்ளனர். வாக்களித்தல் என்பது ஒவ்வொருவரதும் உரிமையாகும். குறிப்பாக கடந்த கால வாக்களிப்புக்களை நோக்கினால் நகர் புறங்களில் வசிக்கும் உயர் மட்டத்தினரும் மிகக் குறைந்த வருமானமுள்ள அடிமட்ட மக்களும் வாக்களிப்பில் கவனம் செலுத்துவ தில்லை என்பது தெரிய வருகிறது.

மலையகப் பகுதிகளில் வாக்காளர்கள் பதிவுப் படிவம் வழங்குவதற்கு அதிகாரிகள் செல்ல முடியாத அல்லது அவ்வாறு அதிகாரிகள் சென்றாலும் குடியிருப்பாளர்கள் தொழிலிலுக்கு சென்றிருப்பது போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதால்இத்தகையோருக்கு வாக்குரிமை கிடைப்பதில்லை. அத்துடன் தோட்டங்களுக்கு வெளியில் தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் தமது தோட்டங்களிலோ, தொழில் செய்யும் இடங்களிலோ வாக்களிக்க முடியாத நிலை தொடர்கிறது.

வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்வோரும் தம்மை வாக்காளர் இடாப்பில் பதிவதில்லை. அத்துடன் வாடகை வீடுகளில் வசிப்போருக்கும் வீட்டு உரிமையாளர்களின் வீண் சந்தேகங்களால் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது.

இவற்றைசரிசெய்வதற்கு விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பில் தெளிவுபடுத்தும் விளம்பரங்கள் தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதுடன் தொலைக்காட்சி மூலம் இது தொடர்பில் தெளிவுபடுத்தும் பிரசாரங்களையும் முன்னெடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70-140 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 | 80 |
| தக்காளி | 100 | 80 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 |
| கோவா | 90 | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 20 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 120-180 | 120-160 | 140-180 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 90 | 80 |
| பாகற்காய் | 60 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 60 | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 160 |
| பீற்றூட் | 60 | 60 | 80 | 120 |
| கறிமிளகாய் | 80 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 400 | 400 |
| போஞ்சி | 120 | 100 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 40-50 | 45-50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 80 | 120 | 100 |

# இராசி பலன்

**16.05.2013**

**(வைகாசி 02, வியாழக்கிழமை)**

**சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு**
**சஷ்டி பிற்பகல் 4.58 மணிவரை**
**பூசம் முன்னிரவு 10.40 மணிவரை**
**இராகுகாலம் 1.23-2.53 மணிவரை**
**சுபநேரம் 7.23-8.53 மணிவரை**
**சஷ்டி விரதம்,அமிர்தசித்தம்**

**மேடம்** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க பிரியப்படுவீர்கள், போக்குவரத்தால் அலைச்சல் ஏற்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் சகோதர ஒற்றுமை கூடும்.

**மிதுனம்** இனிமையான அனுபவங்கள் ஏற்படும் சுப பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும், மாமன் மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும். பொருட்சேர்க்கைக்கு அத்திவாரம் இடுவீர்கள்.

**கடகம்** கனிவாக பேசி காரியம் சாதித்துக் கொள்ள வேண்டிய நாள்,நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**சிங்கம்** செய்தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களை செய்ய முன்வருவீர்கள். திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும் ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சி தரும், திடீர் பண வரவு மனதிற்கு சந்தோசம் தரும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள்.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், வளர்ச்சி பாதையை நோக்கி நகர்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்

**விருச்சிகம்** வருமானம் எதிர் பார்த்தபடி வந்து சேரலாம், காலை நேரத்திலேயே கனிவான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, தொழில் முயற்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும்

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பதனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும் செய்தொழில் மேன்மையுண்டு உறவினர் வருகையுண்டு.

**கும்பம்** உள் ஒன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்சேர்க்கை உண்டு, சுவாரஸ்யமான நாள்

**மீனம்** யோசிக்காமல் செய்த வேலைகளில்கூட வெற்றி பெறுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தி உண்டு, பணத்தேவைகள் பூர்த்தி ஆகும், பிறர் உதவி உண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊ.ந.பொ. நிதியத்தில் நிறுவனங்கள் தம்மை பதிவு செய்ய வேண்டும்

## பிராந்திய இணைப்பாளர் அறிவுறுத்தல்


(யாழ்ப்பாணம்)

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இதுவரை ஆயிரத்து 251 நிறுவனங்கள் பதிவை மேற்கொண்டுள்ளதாக பிராந்திய இணைப்பாளர் ஜெ.தமிழழகன் தெரிவித்தார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தின் செயற்பாடுகள் தற்போது மிகவும் வேகமாக விரிவடைந்து வருவதாகவும் 2010 ஆம் ஆண்டு 311 நிறுவனங்கள் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் பதிவை மேற்கொண்டிருந்த அதேவேளை 2011 ஆம் ஆண்டு 827 நிறுவனங்கள் பதிவை மேற்கொண்டதாகவும் தற்போது ஆயிரத்து 251 நிறுவனங்கள் பதிவை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் அங்கத்தவர்களாக பதிவை மேற்கொண்டுள்ளதாக 45 நிறுவனங்களுக்கு எதிராக இதுவரை சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அதில் கடந்த மூன்று மாதத்தில் மட்டும் 15 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தில் அங்கத்தவர்களாக பதிவை மேற்கொள்ளாதவர்கள் தமது நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவித்த அவர், அவ்வாறு பதிவை மேற்கொள்ளாது இருப்பது சட்டவிரோதமானது எனவும் தெரிவித்தார். (அ-6)



நன்றி: மிரர்

# மின்னல் தாக்கி மரணித்த மீனவரின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

தொண்டைமானாறு பெரிய மலைக் கடற்பரப்பில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடி மின்னல் தாக்கி உயிரிழந்த மீனவரின் சடலம் நேற்று புதன்கிழமை காலை தொண்டைமானாறு பெரியமுலைக் கடற்பரப்பில் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை அதிகாலை இரு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க சென்றவேளை தொண்டைமானாறு பெரிய மலைக் கடற்பரப்பில் வைத்து இடி மின்னல் தாக்கியதில் மீனவர் ஒருவர் உயிரிழந்ததுடன் அவரது சடலமும் காணாமற் போயிருந்தது.

அவருடன் பயணித்த மற்றுமொரு மீனவர் இடி மின்னல் தாக்கிய வேளை அதிர்ச்சியில் மயக்கமுற்று சிறிது நேரத்திற்கு பின் கரை திரும்பினார்.

உயிரிழந்தவரின் சடலத்தை தேடும் பணியில் அப்பகுதி மீனவர்களும் கடற்படையினரும் இருநாட்களாக தீவிரமாக ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்றுக் காலை 7 மணியளவில் தொண்டைமானாறு பெரியமுலைக் கடற்பரப்பில் 8ஆம் பாக பகுதியில் வைத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இடி மின்னல் தாக்கத்தால் சடலத்தின் தலையிலும் நெஞ்சுப் பகுதியிலும் பலத்த காயங்கள் காணப்பட்டன.

இச்சம்பவத்தில் வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் அருளானந்தம் (வயது 18) என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மரண விசாரணையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-3-24)




# யாழ்.கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில் கம்பன் விழா

## மூன்று தினங்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கம்பன் கழகத்தினரின் ஏற்பாட்டில் கம்பன் விழா எதிர்வரும் 23, 24, 25 ஆம் திகதிகளில் நல்லூரில் நடைபெறவுள்ளது.

இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இவ்விழாவின் காலை நிகழ்வுகள் காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் மாலை நிகழ்வுகள் 4.30 இற்கு துர்க்கா மணி மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு துர்க்கா மணி மண்டபத்தில் ஆரம்பிக்கும் மாலை நிகழ்வில் கம்பன் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சு, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதோடு இறை குகன், செல்லும் சொலல் வல்லான் என்ற இரு நூல்களும் 2013 ஆம் ஆண்டு கொழும்பு கம்பன் விழா இறுவெட்டும் வெளியிடப்படவுள்ளன.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் இலக்கிய ஆணைக்குழு, சுழலும் சொற்போர், உரை அரங்கு, பட்டிமன்றம், தத்துவ அரங்கு, கவியரங்கு, வழக்காடு மன்றம் போன்றவை நடைபெறவுள்ளன.

இவற்றில் தமிழக பிரபல வழக்கறிஞரும் இலக்கிய சுடருமான த.இராமலிங்கம், டாக்டர் ரங்கராஜன், புலவர் இரா.மாது போன்ற இந்தியப் பேச்சாளர்களும் கம்பவாரிதி இ.ஜெயராஜ், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், தமிழ்ருவி த.சிவகுமரன், கலாநிதி ஆறுதிருமுருகன், கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், பேராசிரியர் தி.வேல்நம்பி, ந.விஜயசுந்தரம், த.நாகேஸ்வரன், ச.லலீசன் போன்ற பல ஈழத்துப் பேச்சாளரும் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையிலான கவிஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# 'தமிழருவி சொற்கணை' விவாதத்தில் யாழ்.இந்துக் கல்லூரி வென்றது



(மானிப்பாய்)

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றம் அகில இலங்கை ரீதியில் நடத்திய இவ்வாண்டுக்கான தமிழருவி சொற்கணை போட்டிகள் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற இறுதிப் போட்டியுடன் முடிவடைந்துள்ளன.

இவ்விவாதச் சுற்றுப் போட்டியில் 127 பாடசாலை அணிகள் கலந்து கொண்டு மிக உற்சாகமாக போட்டியில் ஈடுபட்டன. இப்போட்டிகளில் யாழ்.இந்துக் கல்லூரி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை தட்டிக் கொண்டது.

கொழும்பு இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் திருகோணமலை கோணேஸ்வரர் இந்துக் கல்லூரியை தோற்கடித்து அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை யாழ். இந்துக் கல்லூரி பெற்றது. வெற்றி பெற்ற அணிக்கு பொறுப்பாசிரியர் வா.சிவராஜாவும், விவாதிப்போராக ஜி.சஜீபன், ப.பிரதீஸ், ச.மயூரேசன், ச.தர்சனன், ஸ்ரீ.இளங்கந்தஸ்ரீ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-3-23)

# எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா பாடநெறி



(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினரால் கட்டுநாயக்கவில் உள்ள எந்திர தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா 4 வருட பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணித பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதோடு இது தொடர்பான விபரங்களை நாளை வெள்ளிக்கிழமை வெளியாகும் வர்த்தமானியில் www.iet.edu.lk என்ற இணையத் தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிக விபரங்களையும் விண்ணப்ப படிவத்தையும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல.44 சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளி என்ற முகவரியிலுள்ள மாவட்ட அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட அலுவலகர் கி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார். (அ)


யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் தெரிவு செய்யப்பட்ட 88 மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழும் காசோலையும் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நிறுவனத்தின் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.கே.சகாயம் ஆகியோர் சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்ரோறியாவை வென்றது மணற்காடு றோ.க. அணி



யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கான மாவட்ட மட்ட எல்லே போட்டி கடந்த வெள்ளிக்கிழமை புனித பத்திரிசியார் கல்லூரியில் இடம் பெற்றது.

பெண்களுக்கான போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணி, பலம் வாய்ந்த அணிகள் பலவற்றுடனும் மோதி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

காலிறுதி ஆட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளுடன் மல்லாகம் மகாவித்தியாலத்தை எதிர்கொண்டு 8 ஓட்டங்களைப் பெற்று 9 ஓட்டங்களை அந்த அணிக்கு வெற்றியிலக்காக நிர்ணயித்தது. எனினும் பதிலுக்கு ஆடிய மல்லாகம் மகாவித்தியாலயம் ஓட்டம் எதையுமே பெறாமல் ஆட்டமிழக்கச் செய்து அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் களம் இறங்கிய சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை விரட்டி அடித்து, வழங்கப்பட்ட 35 பந்துகளில் முதலில் விளையாடிய விக்ரோறியாகக் கல்லூரி, அனைத்து பந்துகளையும் பயன்படுத்தி 6 ஓட்டங்களை எடுத்து 7 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

பதிலுக்கு களமாடிய மணற்காடு றோ.க. வீராங்கனைகள், விக்ரோறியாவின் களத்தடுப்பு வியூகங்களை உடைத்தெறிந்து நாலாபுறமும் பந்துகளை பறக்கவிட்டு வாண வேடிக்கை காட்டினர்.

கள நிலைமையை விக்ரோறியா சுதாகரித்துக் கொள்வதற்கு முன்னரேயே 18 பந்துகள் மீதமிருக்க வெற்றியிலக்கை இலகுவாக கடந்து. மணற்காடு றோ.க. இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலையை எதிர்கொண்டு அப்போட்டியில் 7:3 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் இலகுவாகவென்று மாவட்ட மட்டத்தில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கி மாகாண மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (அ-5)

# பயங்கரவாத நடவடிக்கைகளுடன் இலங்கைக்கு தொடர்புண்டு

## சுவிட்சர்லாந்து தெரிவிப்பு

(கொழும்பு)

சட்ட விரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் இலங்கைக்கும் தொடர்பு இருப்பதாக சுவிட்சர்லாந்து தெரிவித்துள்ளது. சட்ட விரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயங்கள் கண்டறியப்பட்டன.

பயங்கரவாதத்திற்காக இலங்கையிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோத நிதிக் கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய ஆயிரத்து 500 பேர் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

இதில் 15 சம்பவங்கள் பயங்கரவாத நிதிக் கொடுக்கல் வாங்கலாகும் . இவ்வாறு பதிவான சம்பவங்களில் ஒன்றில் 7.45 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் பயங்கரவாதத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது .

இந்த சந்தேக நபர்களில் எவரும் பயங்கரவாத பட்டியலில் குறிப்பிடப்பட்டவர்கள் அல்லர் என்பதுடன் இலங்கை, சைப்பிரஸ், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இவர்களுக்கு பணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விசாரணையின் மூலமும் தெரியவந்துள்ளது. (அ-2)

## பாக். பிரதமர் நவாஸிற்கு ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்ற தேர்தலில் நவாஸ் செரீப் வெற்றி பெற்று பிரதமராகத் தெரிவாகியுள்ளமையை அடுத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வாழ்த்து செய்தியொன்றை அவருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அத்துடன் தொலைபேசி ஊடாகவும் வாழ்த்துத் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-3199)

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து(V)<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>உயரம்: 5' 5"<br>கி.பா:15<br>தகைமை/தொழில்: BSc<br>ஆசிரியர்<br>தொ.இ:B 1801 | பிறப்பு: 1977இந்து (விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பூரட்ட ாதி 2<br>உயரம்: 5' 4"<br>கி.பா:71 7இல் செவ்<br>தகைமை/தொழில்:A/L Cake Making<br>தொ.இ:G1808 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>உயரம்: 5' 7"<br>கி.பா :19<br>தகைமை/தொழில்:<br>பட்டதாரிவங்கி<br>தொ.இ:B 1802 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம் : 5' 2"<br>கி.பா : 5.5<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G1809 |
| பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகிணி<br>உயரம்: 5' 7"கி.பா :48.75<br>தகைமை/தொழில்:B.Sc<br>Manager சமுர்த்தி முகாமையாளர<br>தொ.இ:B1803 | பிறப்பு: 1985 இந்து (K)<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'2" கி.பா: 7இல் செவ்<br>தகைமை/தொழில்: Doctor<br>தொ.இ:G1813 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 1<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: A/L<br>வியாபாரம<br>தொ.இ:B1804 | பிறப்பு: 1972 றோ.க (குருகுலம்)<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>உயரம்: 5'4"<br>கி.பா: 2இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G1814 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்
ஊடக அனுசரணை வலம்புரி

சமாதானப் பெருந்தொனி
வாருங்கள் இலவசம்!
கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின்பிடி, வியாபாரத் தோல்விகள்
பில்லி-சூனியக்கட்டு, பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம் ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார்!!!

இடம்: பொதுவிளையாட்டு மைதானம்,
முல்லைத்தீவு
(மக்கள் வங்கி முன்பாக)

காலம் : 17,18,19 வைகாசி 2013
நேரம் : தினமும் மா்லை 4.00மணி

"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)

இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
1ம் வட்டாரம், வேணாவில், புதுக்குடியிருப்பு.

(2645)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரத்தை மதிப்பதும் நேரம் தவறாமையை பின்பற்றுவதும் ஏன் அவசியமாகின்றன?

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி




பேராசிரியர் மா.சின்னத்தம்பி

**அறிமுகம்**

"சிறுவயதில் இவன் ஒழுங்கானவன்.ஆனால், ஏன் முன்னேறாமல் போய்விட்டான்?"

''இவன் சிறுவயதில் பெரிய கெட்டிக்காரனில்லை. எப்படி இந்தளவுக்கு உயர்ந்தான்?"

இந்த இரண்டு கூற்றுக்களும் நாம் அடிக்கடி கேள்விப்படுவன ; இரண்டு வகையான வாழ்க்கைப் போக்குகளை இவைகாட்டுகின்றன. சிறு வயதில் ஒழுங்காக இருந்தவன் பின்பு நேரம் தவறியே எல்லாம் செய்து வந்ததால் முன்னேறமுடியவில்லை. இது முதலாவது கூற்றின் உட்கிடை.

சிறுவயதில் திறமைகள் கொண்டிராத ஒரு சிறுவன் பின்பு நேரம் தவறாமை மற்றும் உரிய நேரத்தில் எல்லாவற்றையும் செய்தல் என்ற பழக்கங்களுக்கு உட்பட்டதால் வாழ்வில் பெரிய வெற்றியைப் பெற்றுவிட்டான். இது இரண்டாவது கூற்று பதிவு செய்யும் செய்தி.

ஒருமனிதனின்சுயஒழுங்குஎன்பதும் செயல் ஒழுக்கம் என்பதும் ஒன்றிணையும் போது அவன் முன்னேறுவது சாத்தியமாகின்றது. இவற்றை ஒன்றிணைப்பது நேரத்தை அவர்கள் எவ்வாறு மதிக்கின்றனர். எவ்வாறு நேரம் தவறாமையை பின்பற்றுகின்றனர்? எல்லா வேலைகளையும் எவ்வாறு உடனடியாகவே செய்து முடிக்கின்றனர்? தமது நேரத்தையும் பிறரது நேரத்தையும் விரயமாக்கும் காரணிகளையும் நிலைமைகளையும் எவ்வாறு துல்லியமாக இனங்காண்கின்றனர்? அவற்றிலிருந்து எவ்வாறு எச்சரிக்கையுடன் தம்மையும், தமது நேரத்தையும் பாதுகாத்துக்கொள்கின்றனர்? என்பன போன்ற பல விடயங்களிலும் தங்கியுள்ளது.

மாணவர்களும் ஆசிரியர்களும் பணியாளர்களும் தொழில் உரிமையாளர்களும் நேரத்தின் மதிப்பை உணர்ந்து, நேரம் தவறாமையை வாழ்வின் கட்டாயப் பழக்கமாக மாற்றிக்கொள்ள வேண்டும். இதன் அவசியம் பற்றி இங்கு கருத்துரைக்கப்படுகின்றது.

### நேரம் தவறாமை எனும் நற்பழக்கம்

பிள்ளைகள் பள்ளியில் கற்கும் பருவத்தில் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் நேரம் தவறாமை எனும் பண்பை வளர்த்துக்கொள்ளவேண்டும். அது பழக்கமாகி பின்பு வாழ்வின் பண்பாடாக மாறிவிடவும் வேண்டும். ஒரு மனிதனை இனங்காட்டும் அம்சங்களில் ஒன்றாகவும் நேரம் தவறாமை என்ற நடத்தை வளர்ச்சி பெறுதல் அவசியம்.

எல்லோருக்கும் கடவுள் தந்துள்ள சொத்து இந்தக் காலம் என்பதுதான். காலம் தவறாது வாழப் பழகிக் கொள்பவர்கள் அதிலிருந்து விசேடமான சக்தியைப் பெற்றுக்கொள்கின்றனர். சக்தியும் நேரம் தவறாமையும் மேன்மைக்கு இட்டுச் செல்லும் இரண்டு உன்னதங்களாகும்.

காலத்தின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்து கொள்பவர்கள் எப்போதும் தமது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும் தனது நோக்கத்திற்கென சரியாகப் பயன்படுத்திக்கொள்வார்கள். இதனால் அவர்களது வாழ்க்கை மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறிவிடுகிறது.

தனது மாணவர்களை தாமதமாக சந்திக்கும் ஆசிரியர்கள், வகுப்புக்களுக்கு எப்போதும் தாமதமாக செல்லும் மாணவர்கள், பயணத்துக்குரிய ரயிலைத் தவறவிடும் பணியாளர்கள், மின்சாரக்கட்டணங்களைத் தாமதமாக செலுத்தும் குடும்பத் தலைவர்கள், வங்கியில் பணம் போடுவதில் காலம் தாழ்த்தும் தொழிலதிபர்கள் போன்றவர்கள் அவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களின் மனதில் அவநம்பிக்கையை உருவாக்குகிறார்கள். இங்கே குறிப்பிடப்படும் ஆசிரியர்களும் மாணவர்களும் பணியாளர்களும் குடும்பத் தலைவர்களும் தொழிலதிபர்களும் நேர்மையானவர்களாக இருக்கலாம்; அவர்களின் நோக்கங்களும் நல்லவையாக இருக்கலாம்; ஆனால் தமது இலக்குகளில் தோற்றுப் போவார்கள்.

தாமதமாகச் செயற்படுவதால் வரும் நட்டங்களை நேர்மையாக இருத்தல் என்பது ஈடுசெய்யாது என்பது உணரப்படல்வேண்டும்.

எல்லாவற்றையுமே நிமிடம் தவ



கல்வித் தரிசனம்

றாமல் நேரத்தோடு செய்து முடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் தமது பயன்படுத்தும் நேரத்தின் அளவை இரட்டிப்பாக்கிக் கொள்கின்றனர்.

''இழக்கப்படுகின்ற ஒவ்வொரு நிமிடமும் துர்அதிர்ஷ்டத்திற்கான ஒரு வாய்ப்பைத்தான் உருவாக்கிக் கொ ண்டிருக்கின்றது'' என்றான் மாவீரன் நெப்போலியன்.

பாடசாலைகளில் ஆசிரியர்களும் குடும்பங்களில் தந்தையரும் தொழில் நிறுவனங்களில் உரிமையாளரும் தமது நேரத்தை மதித்து செயற்படும் பழக்கத்தைக் கொண்டிருக்கும் போது பிறரின் நேரத்தையும் சேமிக்க உதவுகின்றனர்.

தாமதமாகச் செயற்பட்டு பழகியவர்கள் படிப்படியாக அதற்கு அடிமையாகிப் போய் விடுகின்றனர். அதற்காக அவர்கள் வெட்கப்படுவதும் இல்லை; மனம் வருந்துவதும் இல்லை. தமது நேரம் அதிகம் மதிப்புடையதல்ல என்ற செய்தியை பலருக்கும் தமது செயல் மூலம் வெளிப்படுத்திக்கொண்டே இருக்கின்றனர்.

''நமது நேரத்தில் ஒரு மணித்தியாலத்தின் பெறுமதி ஆயிரம் பொலர்கள்'' என்று கூறினார் ஜெ.பியர் பாயின்ட் மார்கன்.

எப்போது இளைஞர்களும் மாணவர்களும் தமது ஒவ்வொரு மணித்தியாலமும் அதிக மதிப்புடையதென எண்ணத் தொடங்குகின்றனரோ, அப்போதுதான் அவர்கள் நேரம் தவறாமையின் முதன்மையை உணரத் தொடங்குகின்றனர்.

தமக்குரிய வேலைகளை எப்போதுமே தாமதமாகச் செய்பவர்கள் தமக்கு சிறந்த பதவிகளையும் பதவி உயர் வுகளையும் தமது சுய விருப்பத்துடனேயே இழந்து நிற்கின்றனர்.

எவன் ஒருவன் காலதாமதமாக வருவதையும் காலதாமதமாக செயற்படுவதையும் இயல்பா னதாக கருதிக் கொள்கிறானோ அவன் தனக்குரிய வெற்றிகளிலிருந்து அதிக தொலைவில் வாழ்கிறான்; அதை உணர்ந்து கொள்வதற்கு அவனுக்கு மேலும் கூடுதலான காலம் தேவைப்படும்.

தாமாக உடன்பட்டுக்கொண்ட ஒரு சந்திப்புக்கு தாமதமாக வருகின்ற ஒருவர், அவருடைய சந்திப்புக்காக மறுமுனையில் காத்திருந்தவரை பெறுமதி மிக்கவராக கருதவில்லை; அவரது நேரத்தையும் மதிப்பு மிக்கதாகக் கருதவில்லை. தம்மைப் பெறுமதி மிக்கவராக கருதாத ஒருவருக்காக எதிர்காலத்தில் அவர் எதையுமே செய்யப் போவதில்லை என்பதையும் சந்திக்க இருந்தவர் உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வாறு ஒவ் வொரு தடவையும்சந்திப்புக்களில் தாமதம் ஏற்படும் போதெல்லாம் பெறுமதி வாய்ந்த ஒவ்வொரு மனிதர்களை இழந்து விடுகிறோம் என்பதை நேரம் தவறுபவர்கள் உணர வேண்டும்.

தாமதமாக வருபவர்கள் தமது நேரத்தை விரயமாக்குவதுடன் மற்றவர்களது நேரத்தையும் மரியாதைக்குரியதாக்காமல் தடுத்தும் விடுகின்றனர்.

தாமதமாகச் செயற்படும் ஒவ்வொரு நபரும் இன்றைய தினத்தின் கடனுக்காக நாளைய தினத்தை அடகு வைத்துவிட்டனர்; அவர்கள் எவ்வாறு வாழ்வில் வெற்றி பெறமுடியும் என்கிறார் ஆரிசன் ஸ்வெட்மார்டன்.

### உடனடியாகச் செய்து முடித்தல்

எப்போதுமே தயார் நிலையில் இருப்பவர்கள் உடனுக்குடன் தமது முடிபுகளை எடுக்கத்துணிபவர்கள், அடுத்துவரும் வாய்ப்புக்காக துடிப்புடன் காத்திருப்பவர்கள், முதன்மையான வேலைகளுக்கு தயாராக இருப்பவர்கள் போன்றவர்களே எப்போதும் வாழ்வில் வெற்றிபெறுகின்றார்கள். எந்தவொரு விடயத்தையும் தாமதமின்றி உடனுக்குடன் செய்து முடிக்கும் பழக்கம் ஒருவரது திறன்களை ஒருமுகப்படுத்துவதுடன் அவர்கள் மனோரீதியில் வலிமை பெறவும் உதவுகின்றது.

தயாராக இருத்தல், வாய்ப்பை நழுவ விடாது பயன்படுத்துதல் என்ற இரண்டும் எப்போதும் ஒன்றிணைந்துதான் வாழ்கின்றன. இதுபற்றி அமோஸ்லாரன்ஸ் கூறும் பின்வரும் கூற்று முக்கியமானது.

'' உடனடியாக செயற்படும் பழக்கத்தை நாங்கள் உருவாக் கிக் கொண்டிருந்தோம். இதனால் அலைகள் (வாய்ப்புக்கள்) உயர எழும்பும் போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள எங் களால் முடிந்தது. ஆனால், ஏனையவர்க ளது பழக்கமோ அலைகள் மடங்கி விழுந்த பின்னரே செயற்படுவதாக இருந்தது. இதனால் வாழ்வில் அவர்களால் என்றுமே அதிக உயரம் எழ முடியவில்லை"

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு எப்போதும் அவர்கள் முன்னேறுவதற்கான பழக்கங்களை பழக்குவதும் அதற்கான சுற்றுச் சூழலை உருவாக்குவதும் உடனடியாக செயற்படும் இளமைக்காலத்துப் பயிற்சியை கவனமாக வழங்குவதும் மிகவும் அவசியம்.

ஒரு தாயிடம் "கொஞ்சம் பொறுங்கள்'' என்று சொல்லும் பிள்ளைகளும் ''பத்து நிமிடம் பிந்திவிட்டது மன்னிக்கவும்'' என்று பலதடவை கூறும் ஆசிரியர்களும் வாழ்வில் கிடைக்கும் உன்னதமான வாய்ப்புக்களை தவற விட்டு விடுகின்றனர். அல்லது மிகவும் தாமதாகவே முன்னேறுகின்றனர்.

''எனது எல்லா வெற்றிகளுமே ஒரு கால் மணி நேரம் முன்னதாக செல்லும் எனது பழக்கத்தின் விளைவால் ஏற்பட்டவை'' என்கிறார் நெல்சன் பிரபு.

மணிக்கூடுகளே உங்கள் எஜமானர்கள் என்று நம்புங்கள். உங்கள் கடமைகளுக்குரிய நேரங்களில் கடமையாற்றுமாறு அவை கட்டளை இடுவதாக நம்பிக் கொள்ளுங்கள். அவற்றுக்கு அஞ்சி, பணியாற்றிப் பழகுங்கள்; நேரம் தவறாமை என்பதன் மிகச் சிறந்த அடையாளமாக நீங்கள் மாறிவிடுவீர்கள்.

### நேரத்துரோகிகளை கண்டுபிடியுங்கள்

மாணவர்களும் ஆசிரியர்களும் பணியாளர்களும் தொழில் அதிபர்களும் தமது நேரத்தை தமது முன்னேற்றத்துக்குரிய வளமாக பயன்படுத்துவதைத் தடுக்கும் துரோகிகளைக் கண்டறிய வேண்டும். இன்று பெரும்பாலானவர்களின் பெறுமதி மிக்க நேரத்தை விரயமாக்கும் காரணிகளாக பலவுள்ளன. அவற்றில் முக்கியமானவை.

- ✦ கைத்தொலைபேசிகளின் ஒழுங்கற்ற அழைப்புக்கள்
- ✦ தொலைக்காட்சிகளின் தொடர் நாடகங்கள்
- ✦ நோக்கங்களற்ற வகையில் நீண்டு செல்லும் நண்பர்களின் உரையாடல்
- ✦ நன்கு பராமரிக்கப்படாது பயணத்துக்கு பயன்படுத்தும் தனிநபர் போக் குவரத்து வாகனங்கள்.
- ✦ முன் அனுமதி பெறாது வீட்டில் நுழையும் விருந்தினர்கள்.
- ✦ வேண்டாத பொருட்களை விளம்பரம் செய்து விற்க வீடுவரும் வியாபாரிகள்
- ✦ உரிய பொருட்களை உரிய இடத்தில் ஒழுங்காக வைக்கும் பழக்கம் இல்லாமை
- ✦ கொள்வனவுக்குரிய பொருட்களை பட்டியலிடாமல் கொள்வனவுக்காக சந்தை செல்லும் பழக்கம்
- ✦ நாளாந்த வேலைகளை நேரத்தின்படி பட்டியலிட்டு செயற்படுத்தும் பழக்கம் இல்லாமை
- ✦ பாவித்து முடிந்தவற்றையும் வேண்டாதவற்றையும் உடனடியாக அகற்றிவிடும் பழக்கமில்லாமை

இவ்வாறு உங்கள் நேரத்தை உங்களுக்கே தெரியாமல் கொள்ளையிடும் எதிரிகளை இனங்கண்டு அவர்களின் கைதியாகாமல் நீங்கள் வெளியேறி விடுங்கள்.

**முடிவுரை**

வாழ்வில் பள்ளிக்கூடம், கடைகள், அலுவலகம், குடும்பம் கோவில்கள், மருத்துவமனைகள் என்பவற்றுடன் இணைந்தே வாழ்க்கையும் வாழ்க்கையின் வெற்றியும் காணப்படுகின்றது.

எல்லா இடங்களிலும் ஒவ்வொருவரும் நேரம் தவறாமலும் உடனடியாக அலுவல்கள் ஒவ்வொன்றையும் செய்தும் வரும் போது எங்கள் நேரம் எங்கள் செல்வமாகிறது. நாம் அதிர்ஷ்டசாலிகளாகி விடுகிறோம். முன்னேறுகின்றோம். முன்மாதிரிகளாகிறோம். இதனை உணர்வதும் செயலில் காட்டுவதும் எமக்கு அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனல் 4 வீடியோ தொடர்பில் விசாரணை நடைபெறுகின்றது

## ஐரோ.ஒன்றியத்திற்கு அரசாங்கம் அறிவிப்பு

சனல் 4 ஊடகத்தின் வீடியோ தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஐரோப்பிய பாராளுமன்றிற்கான இலங்கை பிரதிநிதி பீ.எம்.ஹம்ஸா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 ஊடகம் சில வீடியோ காட்சிகளை வெளியிட்டுள்ளதாகவும், அவை போலியானவை எனவும் அவ்வீடியோவின் நம்பகத்தன்மை குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆவணப்படத்தின் மூல ஆதாரங்களை தந்து உதவினால் விசாரணைகளை நடத்தமுடியும். தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டவர் என்ற ரீதியில் சனல் 4 ஊடகத்தின் ஆவணப்படம் நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டது என்பதை திட்டவட்டமாக அறிவிக்க முடியும் என அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான புலம் பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் நோக்கில் சனல் 4 ஊடகம் செயற்பட்டு வருவதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் குற்றச் செயல்களுக்கு நிதி உதவிகளை வழங்கியவர்கள் தற்போது சுயாதீன மனித உரிமை ஆர்வலர்களாக தங்களை வெளிப்படுத்திக்கொள்ள முயற்சிப்பதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எண்ணிலடங்காத மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என ஐரோப்பிய பாராளுமன்றில் சனல் 4 ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனல் 4 ஆணவப்படத்தில் தமிழ்மொழியில் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் பிழையான, திரிபுபடுத்தப்பட்ட அடிப்படையில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்றும், இராணுவத்தினர் தாக்கியதாக பொது மக்கள் குறிப்பிட்டுக் கூறவில்லை. தாக்குதல் நடத்தப்பட்டதாகவே அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய புதல்வர் பாலச்சந்திரனை இராணுவத்தினர் படுகொலை செய்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை.

ஒரு சில புகைப்படங்களை வைத்துக் கொண்டு இந்தப் படுகொலையை படையினர் மேற் கொண்டிருக்கலாம் என தீர்மானிப்பது எந்த வகையில் நியாயமானது? என அவர் கேள்வி எழுப்பியுள் ளார்.

சனல் 4 ஊடகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதனை தமிழ்மொழி தெரிந்த அனைவரும் ஏற்றுக்கொள்வர் என ஹம்ஸா தெரிவித்துள்ளார். (அ-2)

# கண்காட்சியும் விற்பனையும்

(மல்லாவி)

சுவிஸ் லேபர் அசிஸ்ரன்ஸ் வழிகாட்டலுடன் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பங்காளர் மாதர் சங்கங்களினால் நடத்தப்படும் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் மாபெரும் கண்காட்சி மற்றும் மலிவு விற் பனை இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மாங்குளம் ஏ-9 வீதியில் உள்ள கிராம சேவையாளர் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள் ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு நாடாவினை வெட்டி நிகழ்வினை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக் கண்காட்சியில் ஒதியமலை,காதலியார் சம்மளங்குளம், கணேசபுரம், மாங்குளம் வடக்கு, மாங்குளம் கற்குவாரி, பனிக்கன் குளம் ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பன்னவேலை கைப்பணி பொருட்கள் மற்றும் சிறு கைத்தொழில் பொருட்கள் உட்பட ஆடை உற்பத்தி, பாதணிகள், பெண்களுக்கான கைப்பை உட்பட பல்வேறுவகையான பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

மேற்படி நிறுவனத்தின் வழிகாட்டலுடன் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் போரினால் பாதிக்கப்பட்ட 50 க்கும் மேற்பட்ட பெண்கள் இப் பயிற்சிகளை பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்து. (அ-3-15)

# வடக்கில் தேர்தல் செப்டெம்பரில்

## வாசு திட்டவட்டம்



வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நடைபெறும் என தேசிய மொழி கள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தும் அரசாங்கத்தின் திட்டங்களில் மாற்றமில்லை. காணி மற் றும் பொலிஸ் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கீழே காணப்படுகின்றன. மாகாணசபைகளுக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என சில கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும், இது வடமாகாணசபைத் தேர் தலை நடத்த தடையாக அமையாது. மத்திய, வடமத்திய மற்றும் வட மாகாண சபைத் தேர்தல்களை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றார். (அ-2)

# வீதிகளில் கால்நடைகள்; தடுத்து நிறுத்துவது யார்?

(புளியம்பொக்கணை)

சுண்டிக்குளம் சந்தி,கல்லாறு வீதி ஆகியவற்றில் இரவு வேளைகளில் கால்நடைகள் தரித்து நிற்பதால் பயணிகள் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது.

மேற்குறித்த வீதிகளால் இரவு வேளையில் பயணிப்போர் அங்கு வீதியின் குறுக்கே கால் நடைகள் பாய்வதால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இரவு வேளைகளில் அவசர தேவை கருதி பயணிப்போர் வாகனத்தில் இருந்துகீழே இறங்கி வீதிக்கு குறுக்கே நிற்கும் கால்நடைகளை துரத்தி விட்டே மீண்டும் பயணிக்க வேண்டிய நிலை உள்ளது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் விடயத்தை கருத்தில் எடுத்து கால் நடைகளை மேற்குறித்த வீதிகளில் தரிக்கவிடாது தடுத்து விபத்துக்களில் இருந்து பயணிகளை பாதுகாக்க ஆவன செய்ய வேண்டுமென பயணிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

# திருக்கேதீஸ்வரத்தில் நேற்று கொடியேற்றம்

(மன்னார்)

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நேற்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. உற்சவங்கள் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

உற்சவத்தில் 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை திருக்கல்யாணமும் இரவு தண்டிகைத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை இரவு பக்தோற்சவமும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தமும் இடம் பெறவுள்ளதாக ஆலய நிர் வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (அ)



வல்வை அணி



கழுகு அணி

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக தடகள போட்டிகளில் 111 புள்ளிகளை பெற்று வல்வெட்டித்துறை கழுகு அணி சம்பியனானது. வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட 20 விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய விளையாட்டு இறுதி நிகழ்வு கடந்த சனிக்கிழமை வல்வெட்டித்துறை கழுகு விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் தடகள போட்டியில் 111 புள்ளிகளை பெற்று கழுகு அணி சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை 79 புள்ளிகளை பெற்று வல்வை அணியும் மூன்றாம் இடத்தை 60 புள்ளிகளை பெற்று சென்தோமஸ் அணியும் பெற்றுக் கொண்டன. இதில் ஆண்கள் பிரிவில் வல்வை 62, கழுகு 34, சென் தோமஸ் 25, பருத்தித்துறை ஐக்கியம் 15, உதயதாரகை 8, பொலிகை ஐக்கியம் 6 புள்ளிகளை பெற்றன. பெண்கள் பிரிவில் கழுகு 77, சென்தோமஸ் 45, வல்வை 17, நெடியகாடு இளைஞர் 15 புள்ளிகளை பெற்றனர்.

(படங்கள்:- செல்வதீபன்)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர், கில்னர் ஒழுங்கையிலுள்ள அருள்மிகு மகாமாரிம்பாள் ஆலயத்தின் அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

உற்சவத்தின் 13 ஆம் நாளான 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 14 ஆம் நாளான 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு தீர்த்தமும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# நிர்வாக உத்தியோகத்தர் நியமனம்

யாழ்.கல்வி வலயத்தின் நிர்வாக உத்தியோகத்தராக திருமதி நற்குணராஜா நந்தினி மாகாண பொது நிர்வாக அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நியமனம் நா.பாலசுப்பிரமணியம் ஓய்வுபெற்றதையடுத்தே இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## ஆலமரமே சாட்சி

நாராயணச்செட்டியார் ஒரு பணக்காரர். அவரிடம் ஒருமுறை குப்பண்ணன் என்பவன் தன் வீடு திடீரென இடிந்து போய்விட்டது எனக்கூறி இருநூறு ரூபாய் கடன் வாங்கினான். ஆனால், அவனால் கடனைக் குறித்த காலத்திற்குள் தீர்க்க முடியவில்லை.

ஒருநாள் நாராயண செட்டியார் குப்பண்ணனைக் கூப்பிட்டு "குப்பண்ணா, ஒரு வருடமாகி விட்டதே. கடனைத் தீர்த்துவிடு" என்று மிகவும் நயமாக கேட்டார். குப்பண்ணனோ கடனா? நானா வாங்கினேன்?" என்று ஆச்சரியப்பட்டவன்போலக் கேட்டான். செட்டியாரும் "ஆமாம். நீதான் வீடு இடிந்து விட்டது, அதைதிருத்திக் கட்டவேண்டும் என்று கூறி என்னிடம் இருந்து வாங்கிக் கொண்டாயே, மறந்துபோய் விட்டதா?" என்று கேட்டார். "நான் மறந்தாலும் உங்களிடம் நான் எழுதிக் கொடுத்த பத்திரம் இருக்குமே" என்றான் அவன். "நான் பத்திரம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லையென்றும் வாய் வார்த்தையில் நம்பி, அவர் பணத்தைக்



கொடுத்தாரென்பதும் அவனுக்குத் தெரிந்ததுதானே"

"செட்டியாரே நீர் சொன்னதை நம்பித்தானே நான் பணத்தைக் கொடுத்தேன். பத்திரம் கூட எழுதிக்கொள்ளவில்லையே" என்றார். அது கேட்டு குப்பண்ணன் "பேஷ்!பேஷ்! பத்திரம் எழுதிவாங்கிக்கொள்ளாமல் நீங்கள் கடன் கொடுத்ததாகக் கூறினார்கள் யார் நம்புவார்கள்?" என்றான்.

பேச்சுவார்த்தை முற்றியது. கூட்டமும் கூடிவிட்டது. செட்டியார் நடந்ததை கூறினார். குப்பண்ணனோ "அவர் கூறியதெல்லாம் பச்சைப் புளுகு" என்றான். ஊரார் நீதிபதியின் முன் இருவரையும் அழைத்துச் சென்றனர்.

நீதிபதி இருவர் கூறியதையும் கவனமாகக் கேட்டுக் கொண்டார். குப்பண்ணனோ "நான் வீட்டைச் செப்பனிட்டது உண்மையே. ஆனால், அது என்னிடம் இருந்த பணத்தைக் கொண்டுதான். இவரிடம் நான் கடன் வாங்கியதற்கு யார் சாட்சி? பத்திரம்தான் ஏது?" என்று கேட்டான்.

நாராயண செட்டியாரோ "நான் குப்பண்ணனுக்கு பணத்தைக் கொடுத்தபோது யாருமே அருகில் இல்லையென்பதும், பத்திரம் எழுதி வாங்கிக் கொள்ளவில்லை என்பதும் உண்மையே. ஆனால், ஒரு ஆலமரத்தடியிலேதான் இவனுக்கு பணம் கொடுத்தேன்" என்றார்.

அதுகேட்டு நீதிபதி "பேஷ்! நீங்கள் கூறுவதிலிருந்து அந்த ஆலமரமே சாட்சி கூறட்டுமே. சரி, இப்போதே நீங்கள் போய் அம்மரத்தினிடம் நான் இங்கு வரச்சொன்னதாகச் சொல்லிவாருங்கள்" என்றார்.

நாராயண செட்டியாரே தயங்கியவாறே "மரம் எப்படி இங்கே வரும்?" என்று கூறவே, நீதிபதியும் "அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். நான் சொன்னதாகச் சொன்னால் வராமல் போய்விடுமா? நீங்கள் மட்டும் நான் சொன்னதாகச் சொல்லி விட்டு வந்து விடுங்கள்" என்றார். நாராயண செட்டியாரும் அரைமனதுடனேயே கிளம்பி போனார்.


நீதிமன்றத்தில் இருந்தோர் எல்லாம் நீதிபதி கூறியது குறித்து திகைத்துபோயினர். குப்பண்ணனுக்கோ ஒரே சந்தோஷம். மரமாவது வரப்போகிறதாவது! நீதிபதியின் மூளையே குளம்பிவிட்டது என்று எண்ணினான். ஒருசில நிமிடங்களுக்கு பிறகு, நீதிபதி மிகவும் அவசரப்படுவதுபோல "என்ன குப்பண்ணா, இதற்குள் நாராயண செட்டியார் அந்த மரத்தை சென்று அடைந்து இருப்பாரா?" என்று கேட்டார்.

குப்பண்ணனோ "இதற்குள்ளாகவா? முடியவே முடியாது. அந்த மரம் இங்கிருந்து சரியாக இரண்டு மைல் தூரத்தில் அல்லவா இருக்கிறது. அங்கு போய் வரக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது பிடிக்குமே?" என்றான்.

உடனே நீதிபதி தன்னுடைய கைத்தடியால் அவன் முதுகில் பளீரென ஓங்கி ஒரு அடி முதுகில் அடித்து "பொய்யா பேசுகிறாய் இங்கே? நாராயணசெட்டியார் எந்த மரத்தடியில் உனக்கு பணம் கொடுத்தார் என்பதும், இங்கிருந்து அது எவ்வளவு தூரம் என்றும் கூட உனக்கு நன்றாகத் தெரிந்துள்ளதே" என்று வெகுகோபத்தோடு அவனிடம் கேட்டார்.

குப்பண்ணன் வெலவெலத்துப் போனான். உடனே, அவருடைய கால்களில் விழுந்து உண்மையை ஒப்புக்கொண்டான். செட்டியார் திரும்பி வந்ததும் அவருக்கு வட்டியும் முதலுமாக சேர்த்து நீதிபதி பணத்தை குப்பண்ணன் இடமிருந்து வாங்கிக் கொடுத்தார். ஊரார் நீதிபதியை மிகவும் பாராட்டி கொண்டாடினார்கள்.

# அம்புலிமாமா கதைகள்



## பிரசங்க பலன்

ஒரு ஊரில் சொக்கன் என்ற பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் மகா கஞ்சன். அவனுடைய மனைவி சொக்கியோ அதற்கு நேர் மாறானவள். தானதர்மங்கள், பூசை, புண்ணிய காரியங்களெனப் பணத்தைச் செலவு செய்வாள்.

ஒருமுறை அந்த ஊரில் இராமநவமியை விமர்சையாகக் கொண்டாடினார்கள். அப்போது இராமாயணப் பிரசங்கத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஊரிலுள்ள பல பிரமுகர்களிடம் அதற்காகப் பண வசூல் செய்தனர். சொக்கனோ ஒரு தம்பிடி கூட கொடுக்க மறுத்து விட்டான்.

இராமநவமியும் வந்தது. அன்று சொக்கி தன் கணவனிடம் "பணம் கொடுக்காவிட்டால் போகிறது. நல்ல கதியடைய நான்கு வார்த்தைகள் கேட்டாவது வரக் கூடாதா?" என்றாள். அவனும் "சரி, நீ சொல்வதற்காக நான்கு வார்த்தைகள் என்ன? நான்கு வாக்கியங்களை முழுவதும் கேட்டு வருகிறேன்" என்று கூறிப் பிரசங்கம் கேட்கச் சென்றான்.

இராமாயண பிரசங்கம் ஆரம்பமாவதற்கு முன் அதை ஏற்பாடு செய்தவர் "ஊரிலுள்ள எல்லோரும் வந்தாகி விட்டதல்லவா? இனி யாராவது வரவேண்டியிருக்கிறதா? என உரத்த குரலில் கேட்டார். உடனே சொக்கனும் அது பிரசங்கியர் கூறும் வார்த்தைகளே என நினைத்துக் கொண்டான்.


ஓரிடத்தில் ஜனங்கள் நின்று கொண்டிருப்பதைக் கண்டு அதே பேர்வழி மீண்டும் "எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்." என்று வேண்டிக் கொண்டார். அதையும் சொக்கன் கவனமாகக் கேட்டுக்கொண்டான். அப்போது ஒரு சிலர் அங்கு நிற்கக்கூட இடமில்லாது திரும்பிப் போவது கண்டு மீண்டும் அதே பேர்வழி "யாரும் திரும்பிப்போகாதீர்கள்" என்றார். சொக்கன் வாக்கியங்களை எண்ணினான். மொத்தம் நான்காயிற்று. பிரசங்கியர் கூறிய நான்கு வாக்கியங்களைக் கேட்டாகி விட்டதென நினைத்து அங்கிருந்து எழுந்து தன் வீட்டிற்கு சென்றான்.

அவன் மனைவியோ பிரசங்கம் கேட்கப் போய்விட்டாள். போகும் அவசரத்தில் கதவைத் தாளிட மறந்து விட்டாள். சொக்கனோ வீடு திரும்பி நேராகப் படுக்கையறைக்குள் சென்று படுத்துவிட்டான். வீட்டின் கதவோ திறந்திருந்தது.

நள்ளிரவு, சில திருடர்கள் அவனது வீட்டிற்குள் நுழைந்தார்கள் அப்போது அரைத் தூக்கத்திலிருந்த சொக்கன் "எல்லோரும் வந்தாகிவிட்டதல்லவா? இன்னமும் யாராவது வரவேண்டுமா?" என்று கூறினான். அது கேட்டுத் திருடர்கள் எல்லோரும் திடுக்கிட்டவாறே மறைவான இடங்களில் உட்கார்ந்து கொண்டனர்.

அப்போது சொக்கன் "எல்லோரும் அமைதியாக உட்காருங்கள்" என்றான். அதைக் கேட்ட திருடர்கள் மெதுவாக எழுந்து செல்ல முயன்றனர். ஏனெனில் அந்த வீட்டுக்காரன் விழித்திருந்து தங்களைப் பிடிக்கச்செய்யும் சூழ்ச்சி என்று அவர்கள் நினைத்துவிட்டனர்.

அப்போது சொக்கன் "யாரும் திரும்பிப்போகாதீர்கள்" என்றான். அதைக் கேட்டு திகிலடைந்த திருடர்கள் எல்லோரும் திரும்பிக்கூட பார்க்காமல் ஓட்டமெடுத்தனர். பிரசங்கத்தைக் கேட்காமலே அவனுக்கு பலன் கிட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டேன் சித்தர் பெருமானை



**05 அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி**

...தூக்கக்கலக்கம் தெளியாத குழுறலாக, என் குரல் ஒலிக்கிறது நீ தான் வேணும், இன்னுமா தூக்கம்! எழுந்திரு! என்று ஆணையிட்டது. அந்த உருவம், கண்களை கசக்கிக் கொண்டு, குழப்பத்துடன் உருவத்தைப் உற்றுப் பார்க்கிறேன்! அதிர்ச்சியுடன் அருகே சுவற்றில் மாட்டியிருந்த, தேசபிதா மகாத்மா காந்தியின் படத்தை திரும்பிப் பார்க்கிறேன்! என் குழப்பம் தெளிகிறது! வந்திருப்பவர் தேசபிதா! அதுவும் நம் வீட்டில், என் படுக்கை அறையில் நிற்கிறார், வந்திருப்பவர் தேசப்பிதா! அதுவும் நம் வீட்டில், என் படுக்கையறையில் நிற்கிறார். என்னுடன் பேசுகிறார், என் உடல் முழுவதும் மின்சாரம் பாய்கிறது! பேச நா எழவில்லை! புன்னகையுடன், அருள் பொங்க கனிவுடன் நோக்கிய மகாத்மா, வா என்னுடன்! என்று சொல்லி விட்டு புறப்பட, நான் அவரை பின் தொமடருகிறேன்.ஒரு காட்டுப் பகுதி வழியாக, நான் காந்திஜியை திரும்பிப் பார்க்கிறேன்! அதற்கு, அவர், என்னைப் பார்த்து, உன்னை சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விட்டேன்! பிறகு, சந்திப் போம்.என்று கூறி இருளில் சென்று மறைந்து விடுகிறார். சித்தர் பெருமானை வணங்குகிறேன் அவர் விபூதி தருகிறார், திடுக்கிட்டு விழித்தெழுந்து படுக்கையில் அமர்ந்தேன்!, அது என் படுக்கை அறை கண்டதெல்லாம் கனவா? காந்திஜி! என் கனவில் வந்தது, என்னை சித்தர் ஆசிரமத்தில் இரு என்ற கட்டளை இட்டது, எல்லாமே கனவா? இப்படி கனவுவரக் காரணம் புரியவில்லை? நீ பல பிறவிகளில் என்னுடன் இருந்தவன்! மீண்டும் சேரும் காலம் வந்தால் நீ வந்தாய். என்ற சித்தரின் வாக்கும் என் வாக்கும் ஞாபகத்தில் வலம் வந்தன. காரணமில்லாமல், காரியமில்லை: என்னை சித்தர் ஆஸ்ரமத்திற்கு வருமாறு அழைக்கிறார் என்று உள்மனம் உற்சாகத்துடன் ஒலித்தது! அன்றே திருச்சி செல்லும் பேரூந்தில் ஆஸ்ரமத்தை நோக்கி என் பயணம் துவங்கியது. பயணம் தொடர்ந்து பேரம்பலூர் வந்து சேர்ந்தேன்.

பெரம்பலூரலிரில் நேராக ஆஸ்ரம்ம் சென்றேன். ஆஸ்ரமத்திற்குள் நான் நுழைந்ததும் வா ராஜா வா! களைப்பாய் இருப்பே! இப்படி வந்து அமர்ந்துகொள். என்று தன்னருகே சுட்டிக் காட்ட பயபக்தியுடன் சென்றமர்ந்தேன். என்ன ராஜா!சட்ட முனி வந்த கூப்பிட்டால் தான் வருவீங்களா? என கிண்டலாக கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது, சட்ட முனியா? என்ன சாமி சொல்றீங்க? என்று கேட்டேன், அதற்க அவர் உங்கள் கனவில வந்தாரே, அவருதான். என்று மேலும் சிரித்தார். அப்படி என்றால் சட்ட முனிதான் மகாத்மாவாக பிறந்தாரா ஆஹா! என்ன பாக்கியம்! அவரைக் காண என்ன தவம் நான் செய்தேனோ? என்று என் மனம மகிழ்ச்சியில் துள்ளியது.

சித்தர் காட்டிய வழி

சாமி! இனி நான் இங்கேயே! உங்களுடன் இருக்க ஆசைப்படுகிறேன். தங்கள் அனுமதி கிடைக்குமா, எனறேன். நான் என்ன அனுமதிப்பது! தானங்களை செய்யவே பிறவி எடுத்தவர், நீங்கள். ஆதலால்,இனி உங்கள் பணி தொடரும், தரும்ம செய்து, தெய்வீக மக்களுக்கு அன்ன தான பெருமைகளை கூறி தரமத்தின் உயர்வுகளைக் சுட்டிக்காட்டி அவர்களை தர்மம் செய்ய ஊக்குவித்தல் ஆகும். பெருஞ்செல்வத்தை வைத்துக் கொண்டு, அதை மேலும் அதிகரிக்கச் செய்ய, அலைபுவனை அணைபோட்டு, தரும வழியில் திருப்பி, ஒருவனை தருமவானாகச் செய்வது தான், தருமம் செய்வதை விட உயர்ந்த தர்மமாகும். செய்யும் தர்மம் தலை காக்கும், தக்க சமயத்தில் உயிர் காக்கும்! இது பெரியோர் வாக்கு. இது இயன்றளவும் நடந்து கொண்டிருப்பது கண்கூடான ஒன்று என்று சித்தர் உபதேசம் செய்தார். தொடர்ந்து அவர் கூறிய இந்த நாடு ஞான பூமியாகும் பிரம்மரிஷிகளும், மகரிஷிகளும், மகாஞானிகளும், சித்தர் பெருமக்களும், நாயன்மார்கள், ஆழ்வார்கள் தோன்றிவாழ்ந்த நாடு! அந்த பெருமக்கள், சாதாரண மனிதனை மாதவம் செய்யாமலேயே இறைவனை மகிழ்விக்க காட்டிய நல்வழிதான் இந்த தானதாம் வழிகள்!

உணவு உயிர் காக்கும்,உண்ட உள்ளங்கள் வாழ்த்தும், இந்த புண்ணிய பூமியில் தருமங்களை, செய்கின்ற போது அங்க இறைவனே வந்து துணை நிற்கிறார். மனிதன் செய்யும் தான தருமங்களை இறைவன் உடனே ஏற்கிறார். இதனால் மனிதன் பூர்வ ஜென்மங்கள் முதல், இந்த ஜென்மம் வரை செய்த, பாவச்சுமைகள் இறக்கி வைக்கப்படுகிந்றன. அவன் பிறவி விமோசனத்தை அடைகிறது. அதனால் ஒருவனுக்கு, தரும வழியைக் காடிடக் கொடுப்பவனுக்கும்பலன், பல மடங்காக உயருகிறது.

இதை அறிந்து, முற்காலத்தில், அரசர்கள் கோவில்களைக் கட்டினர், குளங்களை வெட்டினர், அன்னதான சத்திரங்களை கட்டினர், சாவடிகள், பாடசாலைகள், மடங்கள் திறந்தனர். அந்தக் காலத்தில் ஒவ்வொரு இல்லங்களும் தர்மசாலைகளாகளே திகழ்ந்தன. வீட்டு வாயில்களிலே திண்ணைகளை கட்டி வைத்திருந்தனர். வழிப் போக்கர்கள் களைப்பாறவும்,இரவு பயணிகள் உறங்கி ஒய்வெடுக்கவும் அத்திண்ணைகள் உதவின. வந்து இளைப்பாறுவோரை அவ்வீட்டார் உணவு அளித்து உப சரிப்பர். மோர் தந்து தாகம் தீர்ப்பர், துறவிகளை தேடிச்சென்று அழைத்து வந்து உணவளிப்பர். நாயன்மார்கள் கதைகளில் அவர்கள், சிவனடியா ருக்கு செய்யும் தொண்டே சிவனுக் குச் செய்யும், தொண்டு என்று செயல் பட்டதையும், ஒரு சிவதொண் டர் பெற்ற மகனையே சமைத்துப் பரிமாறிய (சிறுதொண்டர்) கதையுமுண்டு. நடுஇரவில் திடீர் என்று வந்து நின்ற சிவனடியாருக்கு உணவிட தானியம் இல்லாத நிலையில்இருட்டில் வயலுக்குச் சென்று, காலையில் தாம் தூவிவிட்டு வந்த விதை நெல்லை கைகளால் சேர்த்து திரட்டியதை கொணர்ந்து அதைக் கொண்டு விருந்தளித்த நாயனார்கள் கதைகள் உண்டு. (தொடரும்)

# தமிழ்த் தேசியம் ஒரு நுகர்வுப்பொருளா?

ஜெனீவாவின் இரண்டாவது மாநாடு இலங்கையை ஓடவிட்டு மடக்குவதற்கான எறிகயிறு என்பதைப் பலரும் உணர்ந்துள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டிற்கு தலைவியான எலிசபெத் மகாராணி அவரது உடல் நலமின்மை காரண மாகச் செல்லமாட்டார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியைப் பொறுத் சர்வதேச அரங்கில் இப்பொழுது அதிகளவில் பேசப்படும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைக் கப்பட்டுள்ளது.

இலங்கையின் தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றம், தமிழினப்படுகொலை, பொறுப்புக்கூறுவதில் மறுப்பு என்று இதற்கான காரணங்களை அடுக்கிக் கொண்டு போகலாம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை, மகாராணியார் தலைமையிலான பொதுநலவாய நாடுகளின் அமைப்பு, அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப் பகம், சர்வதேச நெருக்கடிக்குழு, உலக மூத்தோர் அமைப்பு போன்றவை இலங்கை மீது கூடுதலான கரிசனையை தொடர்ச்சியாகச் செலுத்தி வருகின்றன.

தளவில் மகாரா்ணி சமுகம் அளித்தால் என்ன, அவரது புதல்வர் சார்ள்ஸ் இளவரசர் சமுகமளித்தால் என்ன, இரண்டுமே ஒன்றுதான். எப்படியாயினும் மாநாடு இலங்கையில் நடந்து முடிந்தால் சரி என்பதே அவரது இலக்கு.

பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர், இந்த வருடம் செப்ரெம்பர் மாதத்தில் வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துப்போவதாக மஹிந்த ராஜபக்ஷவும் அவரது குழுவினரும் மீண்டும் மீண்டும் சொல்லி வருகின்றனர்.

ஆனால், தேர்தல் ஆணையாளர் இதுபற்றி தமக்கு எதுவுமே தெரியாதென்றும் எந்த அறிவித்தலும் தமக்கு வரவில்லையென்றும் அரசியல் கட்சிகளிடம் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 7 ஆம் திகதி தேர்தல் நடைபெறுமென ஓர் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு அமைச்சர் ஊடாகவும் ஒவ்வொரு தகவலை வெளிப்படுத்தி அனைவரையும் குழப்பியடிப்பது அதிகாரத்தில் இருப்பவர்களின் பாணி.

உண்மையாகவே செப்ரெம்பரில் தேர்தல் நடைபெறுவதானால், அடுத்த மாதம் நடுப்பகுதிக்குள் அத்தனை அதிகார பூர்வமாக தேர்தல் ஆணையாளர் வர்த்தமானியின் மூலம் அறிவிக்க வேண்டும்.

அதுவரை வடமாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்பது கேள்விக் குறியாகவே இருக்கும்.

முன்னாள் நீதியரசர் சீ.வி.விக்னேஸ்வரன் தமக்கே உரிய மொழியில் இதனை வேறு விதமாக தெரிவித்திருந்தார்.



தேர்தல் நடைபெறும் வரை தேர்தல் உண்மை என்று நம்ப முடியாது என்பது அவரது அனுபவக் கருத்து தேர்தல் நிச்சயம் நடைபெறும் என்ற நம்பிக்கையை ஊட்டும் வகையில் ஆட்சித்தரப்பினர் உட்பட அனைத்துக் கட்சிகளும் வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்குச் சென்று வேட்பாளர் தேடுதல் நடத்திய விடயம் புதுமையானது.

வீடு வாடகைக்கு உண்டு என்ற விளம்பரம் போன்று நல்ல வேட்பாளர்களை எங்களுக்கு தாருங்கள் என்று பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது போதாதென்று சாவகச்சேரி பிரதேச சபையின் கூட்டமைப்புப் பிரதிநிதி ஒருவரை பெருந்தொகை பணத்திற்கு கொள்முதல் செய்து அவருக்கு ஐ.தே.க. உறுப்புரிமையும் வழங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவும் தமது கட்சியைக் களமிறக்கப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ அணி தனித்தா, கூட்டாகவா சுயேட்சையாகவா என்று முடிவெடுக்க முடியாமல் திண்டாடுகின்றது.

கிட்டத்தட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடும் அப்படியாகத்தான் உள்ளது.

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அதற்கான சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் சுரேஷ் பிரேமச்சந்திரனும் செல்வம் அடைக்கலநாதனும் அவர்களின் ஈ.பி.ஆர்.எல். எவ். மற்றும் ரெலோ ஆதரவாளர்களும் உள்ளனர்.


இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை மீள்குடியமர்த்தி விட்டோம்

## அமைச்சர் பசில் பெருமிதம்




(கொழும்பு)

கடந்த 25 வருடங்களுக்குப் பின் வடக்கையும் தெற்கையும் இணைத்து அனுராதபுரத்திலிருந்து மதவாச்சி ஊடாக மடு வரையிலான புகையிரதப் பாதையைத் திறப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகுமென பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராதபுர புகையிரத நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் காலை 9.48 மணிக்கு புறப்பட்ட மங்கள் புகையிரதம் மதவாச்சியைக் கடந்து மடு புகையிரத நிலையத்தை 10.48 மணிக்கு சென்றடைந்தது.

இப்புகையிரதத்தில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா உட்பட பல பிரமுகர்கள் முதற்பயணத்தை மேற்கொண்டனர்.

அதன்பின், மடு புகையிரத நிலையம் திறக்கப்பட்டது. இப்பாதை மதவாச்சி முதல் மடு வரை 43 கிலோ மீற்றருக்கு சிறப்பாக நவீனமயப்படுத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து நாடு மீட்கப்பட்ட பின்னர் உதயமான சமாதானமும் அதன் மூலம் உருவான அபிவிருத்தீயும் சகல இலங்கையர்களுக்கும் எவ்வித பேதமும் இன்றி உரித்தாகுவதாகவும் அது முழு உலகுக்கும் முக்கிய நிகழ்வாகும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது 25 வருடங்களுக்கு பின்னர் நாட்டு மக்களுக்குக் கிடைத்த பெரும் கொடையாகும். எமது நாட்டு மக்களை ஒன்றிணைக்கும் மகத்தான வேலைத்திட்டம் இது.

படை வீரர்கள் உயிர்த்தியாகம் செய்து நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்தமையாலேயே இது கிடைத்தது. இந்திய அரசின் உதவியும் எமக்குக் கிடைத்தது.

மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்டோரை மீண்டும் சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றியுள்ளோம். அது மிகவும் கஷ்டமான காரியமாகும். எவரையும் அகதி முகாம்களில் வைக்க நாம் இடமளிக்கவில்லை.

வடக்கில் ஒரு பாடசாலையோ ஒரு வைத்தியசாலையோ மூடப்படவில்லை. முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய பிரதேசங்களில் வைத்தியசாலைகள் முன்னேற்றமடைந்துள்ளதுடன் வைத்திய நிபுணர்களுடன் ஆளணியினரையும் மருத்துவ உபகரணங்களையும் வழங்கியுள்ளோம்.

வேற்றுமைகள் இன்றியே இந்த வளங்களை நாம் வழங்கினோம். ஜெனீவா சென்று நாட்டுக்கு எதிராக கருத்து தெரிவிப்போர் இந்த மக்களுக்கு கிடைத்துள்ள சுதந்திரம், அபிவிருத்தி பற்றியும் கருத்து கூற வேண்டுமென கேட்கிறேன் என்றார்.

போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம கூறுகையில்,

புலிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாத்தார் ஜனாதிபதி . அமைச்சர் பசில் ராஜபக்ஷ அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கிறார் என்றார்.

அமைச்சர்களான ரிசாட் பதியுதீன், டக்ளஸ் தேவானந்தா, இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா, புகையிரத பொதுமுகாமையாளர் பீ.ஏ.பீ. ஆரியரத்ன ஆகியோரும் உரை நிகழ்த்திய இந்த வைபவத்தில் மதத் தலைவர்களும் சமுகமளித்து ஆசீர்வாதம் வழங்கினர். (அ-2)

## பெண்கள், சிறுவர்கள் குறித்த கலந்துரையாடல்

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் இலங்கை பெண்கள் பணியகமும் ஜேர்மன் அபிவிருத்தி கூட்டுத்தாபனமும் GIZ இணைந்து வடமாகாணத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பான வேலைத்திட்ட பயிற்சிப் பட்டறையினை நடத்த தீர்மானித்துள்ளது.

இச்செயலமர்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 8.45 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இதில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பாக தொழில் புரியும் உத்தியோகத்தர்கள், மகளிர் அமைப்புக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ. ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.(அ-3-254)

## பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு குறித்து கனடா- பஹாமஸ் பேச்சு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வு தொடர்பில் கனடாவும் பஹாமஸும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

கனேடிய மற்றும் பஹாமஸ் வெளி விவகார அமைச்சருக்கு இடையில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

பஹாமஸ் வெளிவிவகார அமைச்சர் பிரட் மிச்சலுக்கும் கனேடிய மாநில வெளிவிவகார அமைச்சர் டெயன் அபிலோசிக்கும் இடையில் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் அமர்வு குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக பஹாமஸ் வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

கனடா பொதுநலவாய நாடுகள் அமைப்பில் கடந்த நாற்பது ஆண்டுகளாக இணைந்து கொண்டு உறுப்பு நாடுகளுடன் ஒற்றுமையாக செயற்பட்டு வருவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சட்டம், ஒழுங்கு, ஜனநாயகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் குறித்த பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வை நடத்தக் கூடாது என தற்போது கனடா வலியுறுத்தி வருகின்றது. எவ்வாறெனினும், இந்த விடயங்கள் குறித்து பேசப்பட்டதா என்பது பற்றிய தகவல்கள் வெளியிடப்படவில்லை.

கனேடிய மாநில வெளிவிவகார அமைச்சர் தற்போது கரீபியன் நாடுகளுக்கான விஜயமொன்றை மேற்கொண்டு பஹாமஸ் நாட்டு வெளிவிவகார அமைச்சரை சந்தித்துள்ளார். (அ-2)

# கவலை வேண்டாம் 2014 இல் மின்கட்டணம் குறைக்கப்படும்

## *எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு*

(கொழும்பு)

சம்பூர் அனல் மின்நிலையம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்திலுள்ள இலங்கைக்கு பாதகமான இரு நிபந்தனைகளை நீக்க இந்தியா இணங்கியுள்ளது.

இதற்கமைய, மின் கொள்வனவு தொடர்பான புதிய ஒப்பந்தம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அமைச்சரவை அனுமதி கிடைத்தும் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்படுமென மின்சக்தி அமைச்சின் செயலாளரும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் பதில் செயலாருமான எம்.எம்.சி.பேர்டிணன்டஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சம்பூர் அனல் மின் நிலையம் குறித்து வினா எழுப்பட்டது. இதற்கு பதிலளித்த போதே அமைச்சின் செயலாளர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

குறித்த நிபந்தனைகள் மூலம் இலங்கைக்கு 25 வருடங்களுக்கு 120 பில்லியன் நட்டம் ஏற்படுவதாகவும் குறித்த நிபந்தனையாலேயே சம்பூர் திட்டம் தாமதமானதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2011 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இந்திய மின்சார சபைக்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையில் சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்க ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மின்சார கொள்வனவு தொடர்பில் 2012 இல் ஒப்பந்தம் மேற்கொள்ள திட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதிலுள்ள 2 நிபந்தனைகள் இலங்கைக்கு பாதகம் என்பதால், குறித்த ஒப்பந்தம் தாமதமானது. அதனை அகற்ற இந்திய தரப்பு மறுத்தது. தொடர் பேச்சுவார்த்தையின் பின்னர் அவற்றை அகற்ற இந்தியா இணங்கியுள்ளது.

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் சம்பூர் அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்டு உற்பத்திகள் ஆரம்பிக்கப்படாவிட்டால் நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படும். மின்கொள்வனவு ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்ததும் ஒப்பந்தம் கைச்சாத்தாகும்.

நாட்டில் தற்காலிகமாகவே மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அடுத்த வருடம் முதல் கட்டணம் குறைக்கப்படும் .600 மெகா வோட் மின்சாரம் இந்த வருடத்தில் கிடைக்கவுள்ளது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## குருவின் பார்வை இரண்டில் பதிவதால் கோடி, கோடியாய் நன்மைகள் பெருகும்



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**குருவின் பார்வை பலத்தால் கூடுதல் இலாபம் தொழிலில் வரும்!** 80/100

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வியக்கும் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் விருச்சிக இராசிநேயர்களே!**

வந்துவிட்டது குருப்பெயர்ச்சி! உங்கள் இராசிக்கு தனாதிபதியாகவும் புத்திரபாக்கிய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் குரு இப்பொழுது எட்டாம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். உங்களைப்பொறுத்தவரை வெற்றிக்குரிய இடம் எட்டு.

ஏன் என்று சொன்னால் தனாதிபதியாக் விளங்கும் குரு எட்டில் சஞ்சரித்தாலும் அதன் பார்வை தன ஸ்தானத்திலேயே பதிகிறது. எனவே, பொருளாதார நிலை உயரும். வங்கிச் சேமிப்பு வளரும். வருமானம் எதிர்பார்த்தத்தைக் காட்டிலும் கூடுதலாகும்.

கோடி கோடியாய் நன்மைகளை வாரி வழங்கும் குருவின் பார்வை பதியும் இடங்களெல்லாம் புனிதமடைகின்றன. அந்த அடிப்படையில் 2,4,12 ஆகிய மூன்று இடங்களையும் பார்க்கும் குரு, அந்தந்த இடத்திற்குரிய ஆதிபத்தியங்கள் எவை எவை துரிதமாக நடக்க வேண்டுமென்று கருதுகிறோமோ அந்தந்த இடங்களில் எல்லாம் வளர்ச்சி கூடும்.

பொதுவாக எட்டில் சஞ்சரிக்கும் குரு எண்ணிய மாற்றங்கள் எளிதில் கொடுப்பார். பொன், பொருள் வாங்கும் வாய்ப்புகளும் புதிய திருப்பங்கள், மண், பூமியில் இருந்த பிரச்சினைகள் தீரும் வாய்ப்பு, மக்கட் செல்வங்களின் திருமணப்பேச்சுக்கள் முடிவாகும் சூழ்நிலை உருவாக்கும்.

எல்லாவற்றிக்கும் மேலாக குரு உங்கள் இராசியைப்பொறுத்தவரை 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக இருப்பதால் அதன் பார்வை பலனால் பொருளாதாரவிருத்தி ஏற்படும். ஆன்மிகப் பெரியோர்களின் தொடர்பால் காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

**மூளைபலம்தான் உங்களுக்கு மூலபலம்!**

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் சாதனை நிகழ்த்தி சரித்திரத்தில் இடம்பெறும் விதத்தில் அமையும். காரணம், உங்கள் யோசனைகள் தான். விருச்சிக இராசி விருத்தியம்சம் உள்ள இராசி என்பதால் நீங்கள் செல்லும் இடமெல்லாம் செல்வம் தழைத்தோங்கும். உங்கள் கால்பட்ட இடமெல்லாம் கற்பக விருட்சமாக வளரும். உங்கள் கண் பட்ட இடங்களும் கரம் பட்ட இடங்களும் கனகமாய் குவியும். எனவே, வி.ஐ.பிக்கள் பலரும் உங்களை தங்கள் வீட்டிற்கு வரச் சொல்லி வலியுறுத்துவர். பேச்சாற்றலால் பிறரை ஆச்சரியப்பட வைப்பீர்கள்.

உங்கள் வாக்கு பலிக்கும். நீங்கள் கண்ட கனவும் பலிக்கும். உங்கள் தோற்ற பொலிவைப் பார்த்து எடைபோடமுடியாது. உடல் வலிமையைக் காட்டிலும் உங்கள் உள்ளத்திற்கு வலிமை அதிகம். உங்களுக்கு இந்த குருப்பெயர்ச்சி எப்படியிருக்கும், எந்தெந்த வழிகளிலெல்லாம் நன்மைகளைக்கொடுக்கும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**எட்டிலே குருதான் வந்தால் இரண்டினை பார்ப்பதாலே பெட்டியில் பணமும் சேரும்! பெருமையும் வந்துகூடும். கட்டாயம் குருவை நீங்கள் கைகூப்பி தொழுது நின்றால், திட்டங்கள் வெற்றியாகும்! தெய்வங்கள் துணையாய் நிற்கும்! என்று** ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கிற பொழுது எட்டாமிடத்தில் குரு சஞ்சரித்தாலும் இரண்டாம் இடத்தில் அதன் பார்வை பதிவதால் பெட்டியில் பணமும் சேரும். பெருமையும் புகழும் கூடும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். இல்லத்தில் சுபகாரியப்பேச்சுகள் நல்லமுடிவிற்கு வரும்.

**பணத்தேவைகள் பூர்த்தி செய்யும் குருவின் பார்வை!**


குருவின் பார்வை பதியும் 2,4,12 ஆகிய இடங்கள் புனிதம் அடைவதால் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும். பொன், பொருள் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். மிதமிஞ்சிய பொருளாதாரம் ஏற்படும்.

வாங்கல்– கொடுக்கல்கள் எல்லாம் ஒழுங்காகும். கடன் சுமை பாதிக்கு மேல் குறைந்து நிம்மதியை உருவாக்கும்.

குருவின் பார்வை நான்காமிடத்தில் பதிவதால் சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். மகத்தான காரியங்கள் பலவும் செய்து முடிப்பீர்கள். வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் கூடும். தாயின் உடல் நலம் தேறும். தக்கவிதத்தில் கட்டடப்பணியைத் தொடர்ந்தும் இன்னும் அரைகுறையாக நிற்கிறதே என்று கவலைப்பட்டவர்களும் இனி மீதிப் பணியை முடித்து மிக விரைவில் கிரகப் பிரவேசமும் செய்ய முன்வருவீர்கள்.

பகல் இரவாகப் பாடுபட்டதற்கேற்ற பலன் கிட்டும். முன்னோர் சொத்துக்களில் பத்திர பதிவுகளில் இருந்த தடைகள் அகலும். குருவின் பார்வை பன்னிரெண்டாம் இடத்தில் பதிவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும்.

## விருச்சிகம்



குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்புகள் கைகூடிவரும். உற்றார், உறவினர்களின் மற்றும் உடன்பிறப்புகளின் இல்லத்தில் நடைபெறுகின்ற திருமணங்களை முன்நின்று நடத்தி வைப்பீர்கள். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். வீடு மாற்றம், தொழில் மாற்றம் போன்றவைகளை மேற்கொள்ள நினைப்பவர்களுக்கு சுய ஜாதகத்தின் ஒத்துழைப்பும் தேவை.

தற்சமயம் ஏழரைச்சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது என்பதால் குடும்பத்திற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

பன்னிரெண்டாம் இடம் என்பது அயன, சயன ஸ்தானம் என்பதால் வாழ்க்கைத்துணை வழியே வந்த பிரச்சினைகள் ஒவ்வொன்றாக நல்லமுடிவிற்கு வரும். விலகிச்சென்றவர்கள் விரும்பி வந்துசேருவர்.

**இரண்டினை குருதான் பார்த்தால் லாபங்கள் வந்து சேரும்! நான்கினை குருதான் பார்த்தால் நல்லதோர் சுகங்கள் வாய்க்கும்! பன்னிரெண்டை குருதான் பார்த்தால் பயணங்கள் அதிகரிக்கும்!** என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ் பெற்றுக்கொண்டு விரும்பியபடியே தொழில்தொடங்க முன்வருவீர்கள். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அடுத்தவர் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். அந்நியதேசத்திலிருந்து அனுகூலச்செய்திகள் வந்துசேரும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். குழந்தைகளின் கல்வி நலன் கருதியும், கல்யாண வாய்ப்பு கருதியும் எடுத்த முயற்சிகளில் அனுகூலம் கிட்டும். பூர்வீக சொத்துக்களை விற்க நேரிட்டவர்கள் அதே தொகைக்கு புதிய சொத்துக்களை வாங்க முன்வருவர்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

மிதுனத்தில் சஞ்சரிக்கும் குரு 13.11.2013. முதல் 12.03.2014 வரை வக்ர கதியில் இயங்குகிறார். இந்த வக்ரம் உங்க்ள இராசி அடிப்படையில் பார்க்கும் பொழுது 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக குரு விளங்குவதால் அதன் வக்ர இயக்க காலத்தில் வரும் இலாபத்தைத சேமிக்க இயலுமா? என்பது சந்தேகம் தான். குடும்பத்தினர்கள் உங்கள் எண்ணத்திற்கு குறுக்கீடாக நிற்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. பணம் வந்த மறு நிமிடமே செலவாகும் பக்கபலமாக இருந்தவர்கள் உங்கள் மீது குற்றம் குறை சுமத்த முன்வரலாம்.

அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் தருமா? என்பது சந்தேகம் தான். கொடுத்த வாக்கைக் கடைசி நேரத்தில் தான் காப்பாற்றுவீர்கள். கொள்கைப்பிடிப்பை கொஞ்சம் தளர்த்திக்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்த நடந்து கொள்ளாவிட்டாலும் நீங்கள் அவர்கைள அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள். கொள்கையைத் தளர்த்திக்கொள்ளுங்கள். தீபத்தைப்பார்த்து வழிபாடு செய்தபின்னால் செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

குரு உங்கள் இராசிக்கு பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் விளங்குவதால் குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். அவைகள் சில முடிவை தானாகவே எடுத்து விடாமல் உங்களைக் கேட்டு எடுக்கும் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ளுங்கள். ஆலயத்திருப்பணிக்கு கொடுத்து உதவி செய்வீர்கள். ஆன்றோர்கள், சான்றோர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதோடு முன்னோர் வழிபாடு குருவழிபாடு ஆகியவற்றில் முறையாக கவனம் செலுத்தினால் எந்நாளும் இனிமை காண இயலும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

பவுர்ணமி தோறும் கிரிவலம் வந்து சிவபெருமான், நந்தியெம்பெருமான், ஆகிய தெய்வங்களின் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். கற்பகவிநாயகரை கைதொழுது வழிபாட்டால் அற்புத பலன்கள் வந்து சேரும். அனைத்துக்காரியங்களிலும் வெற்றி கிடைக்கும்.



**28.05.2013 - 12.06.2014**

| | | | |
|---|---|---|---|
| | கேது | செவ்வாய் சூரியன் சுக்ரன் | புதன் வியாழன் |
| | குருப் பெயர்ச்சி 28.5.2013 | | |
| | | | |
| சந்திரன் | | சனி (வ) ராகு | |

***சுபஸ்ரீவிஜயவருடம்வைகாசி மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.05.2013) இரவு 9.18 மணிக்கு மிருகசீரிட நட்சத்திரம் மூன்றாம் பாதத் தில் மிதுன இராசியில் குரு பகவான் சஞ்சரிக்கப் போகிறார்.***

**குருவின் வக்ரகாலம்**

**13.11.2013 முதல் 12.03.2014 வரை வியாழன் வக்ர கதியில் இருக்கிறார்.**

**01.06.2013 முதல் 01.07 2013 வரை குரு அஸ்தமனம் பெறுகிறார்.**

**பிறகு 13.06.2014இற்கு கடகத்தில் குரு உச்சம் பெற்று சஞ்சரித்து உன்னத பலன்களை உலகிற்கு வாரிவழங்கப் போகிறார்.**

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்!**


விருச்சிக இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்தக் குருப்பெயர்ச்சி நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான வாய்ப்புகளைக் கொடுக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் ஒத்துழைப்புச்செய்வர். அந்நியதேசத்தில் இருப்பவர்கள் கூட ஆதரவுக்கரம் நீட்டுவர். குருவின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் கணவன்– மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். ஒற்றுமை பலப்படும். உங்கள் பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்க வாய்ப்புகள் கைகூடிவரும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். சனியின் ஆதிக்கமும் நடைபெறுவதால் திடீர் திடீரென செலவுகளும் உருவாகலாம். குருவின் வக்ர காலத்தில்கூடுதல் கவனம் தேவை. திசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை தேர்ந்தெடுத்து செய்வதோடு சர்ப்ப சாந்தியை முறையாக செய்வதன் மூலம் சகல நாட்களையும் யோகமான நாட்களாக மாற்றிக் கொள்ள இயலும்.

**ஜோதிடக் கலைமணி சிவல்புரி சிங்காரம்**

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தனது இலக்கின், மையத்தை நெருங்கி வரும் சீனா




உலகிலேயே கப்பல் வராத துறைமுகமும், விமானம் வராத விமான நிலையமும் இலங்கையில் மட்டும் தான் உள்ளன. என்று அண்மையில் கிண்டலடித்திருந்தார் முன்னாள் இராணுவத் தளபதியும் ஜனநாயக கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா.

அவரது அந்தக் கிண்டலுக்குக் காரணம் அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகமும், மத்தல ராஜபக்ஷ விமான நிலையமும் பெரிதாகப் பயன்படுத்தப்படாமையே.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 2005 இல் பதவிக்கு வந்த பின்னர், சீனாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட பாரிய திட்டங்கள், பொதுப் பயன்பாட்டுக்கு ஏற்றவையா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தக் கேள்விக்கு சீன உதவியுடனான மூன்று முக்கிய திட்டங்கள் குறித்து எழுகின்ற சந்தேகங்கள் தான் காரணம். பெருமளவு வருமானம் ஈட்டலாம் என்று கூறி அமைக்கப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு எதிர்பார்க்கப்பட்டது போன்று, கப்பல்கள் வருவதில்லை என்பதும், பயணிகள் போக்குவரத்து அதிகம் இருக்கும் என்ற நம்பிக்கையில் கட்டப்பட்ட மத்தல விமான நிலையம் ஒரு ஓய்வு நிலையமாக செயற்பட்டு வருகின்றமை என்பதும், நுரைச்சோலை அனல் மின்நிலையம் அடிக்கடி பழுதடைவதனால், பேசாமல் சீனாவிடமே ஒப்படைத்து விடலாமா? என்று அரசாங்கத்தைச் சிந்திக்க வைக்கின்றமை ஆகிய இம்மூன்றுமே இலங்கையில் சீனாவின் முதலீட்டில் பெருந்தொகை பணத்தை கொட்டி உருவாக்கப்பட்டதிட்டங்கள்.

அம்பாந்தோட்டை மாகம்புர ராஜபக்ஷ துறைமுகத்தின் முதற்கட்ட கட்டுமானப்பணிகள் முடிந்து, 2010 நவம்பரில் திறந்து வைக்கப்பட்டது. 85 வீதம் சீனா முதலீடு செய்த -முதலாவது கட்டத்துக்கு செல விடப்பட்ட நிதி 360 மில்லியன் டொலர். இரண்டாவது கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வரும் கொள்கலன் முனையம் மற்றும் அது சார்ந்த வசதிகளுக்காக செலவிடப்படவுள்ள நிதி 750 மில்லியன் டொலர்.

சர்வதேச கப்பல் போக்குவரத்துப் பாதை அம்பாந்தேர்ாட்டைத் துறைமுகத்தில் இருந்து சுமார் 6 தொடக்கம் 10 கடல் மைல் தொலைவிலேயே உள்ளது. இதன் வழியாக ஆண்டுக்கு சுமார் 36 ஆயிரம் கப்பல்களும் 4500 எண்ணெய் தாங்கிக் கப்பல்களும் பயணிக்கின்றன. எனவே, எரிபொருள் நிரப்புதல், மாலுமிகளை மாற்றுதல் உள்ளிட்ட வசதிகளுடன் அம்பாந்தோட்டையில் துறைமுத்தை அமைத்தால் கோடி கோடியாகப் பணம் கொட்டும் என்று அரசாங்கம் கூறியது. ஆனால், இந்தத் துறைமுகம் திறக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகளாகப் போகின்ற நிலையில் இதனால் கிடைக்கப்பெற்றுள்ள இலாபம் என்ன?

கிட்டத்தட்ட ஆண்டுக்கு 40 ஆயிரம் கப்பல்கள் பயணம் செய்யும் சர்வதேச கடற்பாதையில் அமைந்துள்ள இந்தத் துறைமுகத்தை அதன் வழியாகப் பயணிக்கும் கப்பல்கள் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.

எவ்வளவோ சலுகைள் வசதிகளை செய்து கொடுத்தும் இறக்குமதியாளர்கள் இந்தத் துறைமுகம் வழியாகப் பொருட்களை இறக்குவதில்லை. எப்போதாவது ஒரு கப்பல் இங்கு வந்தாலே அது பெரிய அதிசயமாகப் பார்க்கப்படும் நிலை அங்கு தொடர்கிறது. வேறு வழியின்றி அரசாங்கம், பாவித்த வாகனங்களை இந்தத் துறைமுகம் வழியாகவே இறக்குமதி செய்ய வேண்டும் என்றும் கொழும்புத் துறைமுகத்தில் இறக்கப்படக்கூடாது என்றும் கட்டுப்பாடு விதித்தது.

இதனால், இந்தியாவில் இருந்தும், ஜப்பானில் இருந்தும் அவ்வப்போது மாகம்புர துறைமுகத்துக்கு சில கப்பல்கள் வருகின்றன. மற்றப்படி இந்தத் துறைமுகத்தைத் தேடி வந்த கப்பல்கள் என்றால், மிகச் சொற்பமே. வழக்கம் போலவே கடலுக்குள் துறைமுகத்தை அமைப்பதற்கு சாத்தியமில்லை என்பதால், நிலப்பரப்பைத் தோண்டி இந்தத் துறைமுகம் உருவாக்கப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட முதலாவது, இத்தகைய செயற்கைத் துறைமுகம் என்ற பெயரை மட்டுமே இதனால் பெற முடிந்தது. இந்தத் துறைமுகம் காற்று வாங்கிக் கொண்டிருக்க- இந்தத் துறைமுகத்தின் கட்டுமானப் பணியின் முதற்கட்டத்திற்காக சீனாவிடம் பெறப்பட்ட கடன் பெருகிக் கொண்டிருக்கிறது.

இதுபோலவேதான் இரண்டு மாதங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையமும் பயணிகள் வருகையின்றி காய்ந்து கிடக்கிறது.

சீனாவின் நிதி மற்றும் கட்டுமான உதவிகளுடன் கிட்டத்தட்ட 210 மில்லியன் ரூபா செலவில் கட்டப் பட்டுள்ள விமான நிலையத்தின் முதற்கட்டப் பணிகள் முடிவடைந்து திறந்து வைக்கப்பட்டு இரண்டு மாதங்களாகின்றன.

இதனால், தெற்கிலுள்ள பெருமளவு மக்கள் பயனடைவார்கள் என்றும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

பல்வேறு வெளிநாட்டு விமான நிறுவனங்களும் இந்த விமான நிலையம் ஊடாக சேவையை நடத்த ஆர்வம் காட்டி வருவதாக அரசாங்கம் கூறியது.

ஆனால், இந்த இரண்டு மாதங்களில் நிலைமை தலைகீழாகிவிட்டது. வீம்புக்காக இலங்கை அரசின் விமான சேவை நிறுவனங்களான சிறீலங்கன் எயர் லைன்சும், மிஹின் லங்காவும்தான் இதன் வழியாக சேவையை நடத்துகின்றன.

சார்ஜாவுக்கு வாரத்தில் இரண்டு முறை சேவை நடத்தி வந்த எயார் அரேபியா நிறுவனம் சொல்லாமல் கொள்ளாமல் தனது சேவையை நிறுத்திக் கொண்டு விட்டது. அதற்குக் காரணம் மிகக் குறைந்தளவு பயணிகள் தான்.

விமான நிலையம் திறக்கப்பட்டு சுமார் ஒரு மாதம் கழித்து ஒரு செய்தி வெளியானது; மத்தல விமான நிலையம் வழியாக பயணிகள் மட்டும்தான் பயணத்தை மேற்கொண்டுள்ளதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது. அதனை அரசாங்கம் உறுதிப்படுத்தவும் இல்லை. நிராகரிக்கவும் இல்லை. ஏராளமான சலுகைகளைக் கொடுத்தும் மத்தல விமான நிலையத்தை பயணி களோ, விமான நிறுவனங்களோ பயன்படுத்த முன்வரவில்லை. எமிரேட்ஸ், எடிஹாட், கட்டார் எயார்வேய்ஸ், எயார் சைனா போன்ற பல நிறுவனங்கள் மத்தலவுக்கு சேவை நடத்தப் போட்டி போடுவதாக முன்னர் அரசாங்கம் கூறியது. ஆனால், இந்த விமான நிலையத்தை அமைத்துக் கொடுத்த சீனாவின் விமான நிறுவனம் கூட இதுவரை மத்தலவைத் திரும்பிப் பார்க்கவில்லை. இலங்கைக்கு அதிகளவில் வரும் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்தே வருகின்ற நிலையில் எந்தவொரு இந்திய நிறுவனமும் மத்தலவுக்கு சேவையை நடத்த முன்வரவில்லை. மிஹின் லங்கா அவ்வப்போது புத்தகாயாவுக்கும், சிறீ லங்கன் எயார்லைன்ஸ் பாங்கொக், பெய்யிங், ரியாத், மாலே ஆகியவற்றுக்கு வாரத்தில் வெறும் எட்டு சேவைகளையும் மட்டுமே நடத்தி வருகின்றன.

இவை கூட, கட்டுநாயக்கா விமான நிலையம் வழியாகவே இயக்கப்படுகின்றன. பெய்ஜிங்கிற்கான சேவை அம்பாந்தோட்டையில் உள்ள சீனக் கட்டுமானப் பணியாளர்களை மையப்படுத்தியே நடத்தப்படுகிறது. கொமன் வெல்த் விளையாட்டுப்போட்டி மற்றும் உச்சி மாநாடு என்பவற்றை அடிப்படையாக வைத்து மத்தல விமான நிலையத்தை பிரபலப்படுத்தலாம் என்று அரசாங்கம் நினைத்திருந்தது.

ஆனால், கொமன் வெல்த் விளையாட்டுப் போட்டியை கோல்ட் கோஸ்ட் நகரம் பறித்துக்கொண்டதும் கொமன் வெல்த் உச்சி மாநாடு கூட கொழும்புக்கு மாற்றப்பட்டதும் மத்தலவுக்கு பின்னடைவுதான்.

எரிபொருள் சேமிப்பு வசதி கூட செய்யப்படாத- உலகில் உள்ள ஒரு விமான நிலையமாகவும் மத்தல விளங்குகிறது. இது திறக்கப்பட்டு இப் போது தான் இரண்டு மாதங்களாகின்றன. எனவே, இதன் வெற்றி தோல்வியை உடனடியாக முழுமையாக மதிப்பிட முடியாவிட்டாலும் எதிர்பார்ப்பு ஏற்படுத்தப்பட்டளவுக்கு இது வெற்றிகரமான திட்டமாக இல்லை என்பதே உண்மை.

லக்விஜய மின் நிலையம் என்று பெயரிடப்பட்டுள்ள நுரைச்சோலை அனல் மின் நிலையம் சீனாவின் 1.35 பில்லியன் முதலீட்டில் மேற்கொள்ளப்படும் மற்றொரு பாரிய திட்டமாகும். 900 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இந்த மின் திட்டத்தின் முதற்கட்டப் பணிகள்தான் முடிந்துள்ளன. இங்கு மின் உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகப் போகின்றன.

இந்தக் காலத்தில் உற்பத்திக் குறைபாடுகள், தீ விபத்து, கோளாறுகள் என்று அடிக்கடி மின் உற்பத்தி தடைப்படுவது வழக்கமாகிவிட்டது. இதன் காரணமாக இதன் நிர்வாகத்தை சீனாவிடமே ஒப்படைத்து விடப்போவதாகவும் செய்திகள் பரவின. அரசாங்கம் அதனை மறுத்திருந்த போதிலும் அப்படியானதொரு திட்டம் அரசாங்கத்துக்கு இருப்பதாகவே தெரிகிறது.

நுரைச்சோலை அனல்மின் திட்டத்தை சீனாவிடமே ஒப்படைத்து விடும் முடிவை, அரசாங்கம் எடுக்குமேயானால், அதுதான் சீனாவுக்கு கிடைக்கப்போகின்ற மிகப்பெரிய வெற்றியாக அமையும்.

இலங்கையில் சீனா மிகப்பெரிய திட்டங்களில் போட்டுள்ள முதலீடுகளுக்கெல்லாம் ஒரு அடிப்படை இலக்கு உள்ளது. இது ஒன்றும் அரசியல் அல்லது பொருளாதார நலன் சார்ந்த விடயமல்ல. இராணுவ நலன் சார்ந்த விடயம்.

நுரைச்சோலை அனல் மின் நிலையம் உள்ளிட்ட திட்டங்களில் இதுவரை சீனா முதலீடுகளைச் செய்துள்ளது. கட்டுமானப் பணிகளை மேற்கொண்டுள்ளது. ஆனால், நிர்வாகத்தை ஏற்று நடத்தவில்லை. நுரைச்சோலை சீனாவிடம் கையளிக்கப்பட்டால் அது சீனாவின் நிர்வாகத் தலையீடுகள் இலங்கையில் தலை தூக்குவதன் அடையாளமாக இருக்கும். அது ஒரு கட்டத்தில் மத்தலவுக்கும் மாகம்புரவுக்கும்கூடப் பரவலாம். அத்தகைய கட்டத்தில் சீனாவின் இராணுவ ரீதியான எதிர்பார்ப்பு முழுமையடையும்.

திட்டங்களின் சாத்தியமின்மை குறித்து விரிவாக ஆராயப்படாமல் அரசியல் ரீதியாக எடுக்கப்படும் முடிவுகள் எந்தளவுக்கு ஆபத்தானவை என்பதற்கு சீனாவின் முதலீட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களே சாட்சியாக உள்ளன.

இந்தச் சீன முதலீடுகள் இலங்கையை கடனுக்குள் மட்டும் தான் மூழ்கச் செய்யப்போகிறதா? அல்லது அதற்கு அப்பாலும் அதன் விளைவுகள் தொடரப்போகின்றனவா? என்பன முக்கியமான கேள்விகளாக உள்ளன.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியோரங்களில் மீன்விற்கப்படுகின்றது

## மக்கள் கடும் விசனம்

புதுக்குடியிருப்பு பிரதேசசபைக் குட்பட்ட பொதுச் சந்தையில் மீன் வியாபாரிகள் மாலை நேரங்களில் மீன் விற்பனை செய்யாது, தெருவோரங்களில் வைத்து விற்பனை செய்வதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் வீதியோரமாக உள்ள வாய்க்கால்களுக்கு அருகில் இம் மீன் வியா பாரம் மாலைவேளைகளில் இடம் பெறுகின்றது. பகல் வேளையில் மேற்குறித்த பொதுச் சந்தையில் மீன் வியாபாரம் நடைபெறுகின்றது.

மாலை வேளையில் இங்கு மீன் வியாபாரம் மேற்கொள்ளப்படாத காரணம் தான் என்ன? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இவ்வாறு வீதியோரத்தில் மீன் வியாபாரம் இடம்பெறுவதால் வாகனப் புகை மீன்களில் உட்புகுகின்றது. அத்துடன் நுகர்வோர் விபத்துக்களையும் எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

எனவே, புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பொதுச் சந்தையில் புதுக்குடியிருப்பு, விசுவமடு, சுண்டிக்குளம் ஆகியபகுதி மீனவர்கள் மாலைவேளையில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு பொறுப்பானகள் அறிவுறுத்த வேண்டுமென அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர். (அ-3-264)

# குடிநீருக்கு அலையும் பேராறு கிராம மக்கள்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பேராறு கிராம மக்கள் குடிநீர் இன்றித் தவிக்கின்றனர்.

மேற்படி கிராமத்தில் பல நூற்றுக்கணக்கான வறிய குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்களின் குடிநீர் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில் இடப்பெயர்வுக்கு முன்னர் அதாவது, யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் நான்கு குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்திருந்தன.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளின் பின்னர் மக்கள் குடியேறிய போது மூன்று குழாய்க் கிணறுகள் பழுதடைந்த நிலையிலும், ஒன்று பாவிக்கக் கூடிய தாகவும் இருந்தது. பின்னர் அதுவும் பழுதடைந்து விட்டது.

இன்று மக்கள் அயல் கிராமக் குடியிருப்பாளர்களின் குடிநீர்க் கிணறுகளைத் தேடி அலைந்து திரிகின்றனர்.

இவர்களில் அநேகமான குடும்பங்கள் நாளாந்தக் கூலி வேலைகளுக்குச் செல்வதால் அதிகாலையிலும் மற்றும் இரவு நேரங்களிலும் குடி நீரைப் பெறச் செல்கின்ற போது கிணற்று உரிமையாளர்கள் இவர்களுடன் முரண்படுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

இப்பிரச்சினை தொடர்பாக மக்கள் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் உட்பட முல்லை. மாவட்ட அரச அதிபருக்கும் பல முறை தெரியப்படுத்தி, நான்கு வருடம் கடந்த நிலையிலும் இன்னும் இதற்கு தீர்வு கிடைக்கவில்லை.

எனவே, போரினால் பல்வேறு பிரச்சினைகளுக்கு உட்பட்டிருக்கும் இம் மக்களுக்கு தாகம் தீர்ப்பதற்கு தண்ணீர்க் கிணறுகளையோ அல்லது பழுதடைந்திருக்கும் குழாய்க் கிணறுகளை திருத்தித் தருவதற்கோ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உதவ வேண்டும் என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-15)

# மகசின் சிறைச்சாலையில் எமக்கு பாதுகாப்பில்லை

## வேறு பிரிவுக்கு மாற்றுமாறு கைதிகள் கோரிக்கை

கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்அரசியல்கைதிகளுடன், போதைவஸ்துக் குற்றச்சாட்டு மற்றும் கொலைக் குற்றச்சாட்டு சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையினால் அரசியல் கைதிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

போதைவஸ்துக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் கொலைக்குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகியுள்ள பெரும்பான்மையினக் கைதிகளை வேறு பிரிவுக்கு மாற்றுமாறு தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகசின் சிறைச்சாலையில் ஜிஎச் பிரிவில் 51தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சில தினங்களுக்கு முன்னர் 15 பெரும்பான்மையின கைதிகளும் இவர்களது பிரிவுக்குள் அடைக்கப்பட்டனர். இதனையடுத்து பெரும்பான்மையினக் கைதிகளுடன் தம்மை தடுத்து வைக்க வேண்டாமெனக் கோரி தமிழ் அரசியல்கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக மகசின் சிறைச்சாலையின் அத்தியட்சகர் எமில் ரஞ்சன் நேற்று முன்தினம் கூறுகையில்,

தமிழ் அரசியல் கைதிகளுடன் போதைவஸ்து குற்றச்சாட்டு மற்றும் கொலைக்குற்றச்சாட்டுக்கு உள்ளான பெரும்பான்மையினக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையால் அச்சுறுத்தல் நிலை அரசியல் கைதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சிறைச்சாலை அத்தியட்சகரிடம் குமரகுருபரன் எடுத்துக் கூறியுள்ளார். கைதிகளை தமிழ், சிங்களம் என நாம் வேறுபடுத்த முடியாது. ஆனாலும் தமிழ்க் கைதிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்படுமென்று மகசின் சிறைச்சாலை அத்தியட்சகர் உறுதியளித்துள்ளார். (அ-2)

# மாந்தை கிழக்கில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு வசதிகள் இல்லை

(பூந்தோட்டம்)

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களில் , வேறு பிரதேசங்களில் இருந்து வந்து பணி புரியவருபவர்களுக்கு போதியளவு வசதிவாய்ப்புகள் காணப்படவில்லை என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் சி.செந்தூரன் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் நிலைமைகள்தொடர்பில்அவரிடம்கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள் இல்லாத நிலை உள்ளது. இதனால் ஏனைய பிரதேசங்களில் இருந்து வரும் உத்தியோகத்தர்கள் தங்குமிடத்தை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன், அவர்கள் தங்கியுள்ள சில இடங்கள் மற்றும் பல அரச திணைக்களங்கள் உட்பட பல தனியார் நிறுவனங்களுக்கும் மின்சார வசதி இல்லை .

இதனால், இப்பகுதி மக்களும் உத்தியோகத்தர்களும் சொல்லமுடியாத துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இவ்வாறான நிலையினால் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் எமது சபை உட்பட அனைத்து திணைக்களங்களிலும் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகிறது. குறிப்பாக நட்டாங்கண்டல் பிரதேச வைத்திய சாலையில் தாதியர் மற்றும் உத்தியோகத்தர்களின் பணியை அங்கு கடமையாற்றும் வைத்தியரே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இதனை தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் முன்வரும்போதுதான் உத்தியோகத்தர்களும் மக்களும் தமது தேவைகளை பூரணமாக பெறமுடிவதோடு அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

இதேவேளை, 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள போதிலும் , இம் மக்கள் வீடுகளை கட்டி முடிப்பதற்கு பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வீட்டுத்திட்டத்திற்கான மண லைப் பெறுவதில் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர். இதன் காரணமாக குறித்த காலப்பகுதியில் வீட்டுத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதவர்களாக அவர் கள் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2-250-266)





- ❖ *1667* - யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வாக்கிய பஞ்சாங்கம் இராமலிங்க முனிவரால் வெளியிடப்பட்டது.
- ❖ *1811* -கூட்டுப் படைகள் (ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் பிரித்தானியா) பிரெஞ்சுப் படைகளை ஆல்புவேரா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் தோற்கடித்தன.
- ❖ *1916* - யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக வெசாக் பண்டிகை அங்குள்ள சிங்கள மக்களால் கொண்டாடப்பட்டது.
- ❖ *1920*-ரோமில் ஜோன் ஒஃப் ஆர்க் திருத்தந்தை 15 ஆம் பெனடிக்ட்டினால் புனிதப்படுத்தப்பட்டார்.
- ❖ *1932*-மும்பையில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இடம்பெற்ற கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனா.
- ❖ *1960*-கலிபோர்னியாவில் ஹியூஸ் ஆய்வுகூடத்தில் தியொடர் மாய்மன் முதலாவது லேசர் ஒளிக்கதிரை இயக்கினார்.
- ❖ *1966*- சீனாவின் கலாசாரப் புரட்சியின் ஆரம்பத்தை சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்தது.
- ❖ *1967*-ஜெருசலேம் நகரம் இஸ்ரேலின் வசம் வந்தது.
- ❖ *1969*-சோவியத்தின் வெனேரா 5 விண்கலம் வீனஸ் கோளில் இறங்கியது.
- ❖ *1975*-பொதுமக்கள் வாக்கெடுப்பின் அடிப்படையில் சிக்கிம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது.
- ❖ *1975*-ஜுன்கோ டபெய், எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதற் பெண் ஆனார்.
- ❖ *1992* - எண்டெவர் விண்ணோடம் தனது முதலாவது பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது.
- ❖ *2004*-30களில் கம்யூனிஸ்ட்டுகளினால் படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களை நினைவுகூர உக்ரேனின் தலைநகர் கீவுக்கு அருகில் உள்ள பிக்கீவ்னியாக் காட்டில் பல்லாயிரக்கணக்கானோர் கூடினர்.
- ❖ *2006* - தமிழ்நாட்டில் அனைத்து சாதியினரும் கோயில்களில் அர்ச்சகராகத் தகுதி உடையவராக அறிவிக்க மு. கருணாநிதி தலைமையிலான தமிழக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டது.
- ❖ *2006* -நியூசிலாந்திற்கருகில் 7.4 ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டது.

பிறப்பு

- ❖ *1931* - நட்வர் சிங், இந்திய அரசியல்வாதி

இறப்புகள்

- ❖ *1830*-ஜோசப் ஃபூரியே, பிரெஞ்சு கணிதவியலாளரும் இயற்பியலாளரும் (பி. 1768)
- ❖ *1947* - பிரடெரிக் ஹொப்கின்ஸ், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1861)



என்டெவர் விண்ணோடம்

எண்டெவர் ( சுற்றூர்தி OV-105) அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் நாசா இயக்கத்தில் வைத்துள்ள மூன்று விண் சுற்றுக்கலன்களில் ஒன்று. (ஏனையவை: டிஸ்கவரி, அட்லாண்டிஸ்) 1992 இல் STS-49 திட்டத்தின் மூலம் முதல் பயணத்தில் இண்டெல்சாட் 6 செயற்கைக்கோளை சீர்செய்ய எண்டவர் செலுத்தப்பட்டது. 19 வருட இயக்கத்தில் 112 பயணங்க ளுக்குப் பின், மே 2011இல் இறுதியாக STS-134 திட்டம் மூலம் அனைத்துலக விண்வெளி நிலையத்தில் 2 பில்லியன் டாலர் மதிப்பிலான துகள் இயற்பியல் ஆய்வுக்கருவிகளை நிறுவியது.

என்டெவர் விண்ணோடம் (Space Shuttle Endeavour) நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் ஐந்தாவதும் கடைசியுமான விண்ணோடம் ஆகும்.

1986இல் விபத்துக்குள்ளாகி மறைந்த சலேஞ்சர் விண்ணோடத்திற்கு மாற்றாக என்டெவர் விண்ணோடத்தை அமைக்க 1987இல் அமெரிக்கக் காங்கிரஸ் ஒப்புதல் அளித்தது. அந்நேரத்தில் பாவனையில் இருந்த டிஸ்கவரி விண்ணோடம் மற்றும் அட்லாண்டிஸ் விண்ணோடம் ஆகியவற்றின் உதிரிப் பாகங்களை என்டெவர் விண்ணோடத்திற்கு உபயோகப்பட்டன. மே மாதம் 1991 இல் இவ்விண்ணோடம் றொக்வெல் இண்டர்நஷனல் என்ற தாபனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. எனினும் இது 1992 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி விண்ணுக்கு முதன் முதலாக ஏவப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாண்டு க.பொ.த.உயர்தர பிரிவில் தகவல் தொழில்நுட்ப பாடம் அறிமுகம்

(கொழும்பு)

**இவ்வருடத்துக்கான க.பொ.த உயர்தர வகுப்புக்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 15 திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,**

உயர் தர வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான சுற்ற றிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சேர்த்துக் கொள்ளப் பட்ட மாணவர்களின் பெயர் பட்டியலை அதி பர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திக திக்கு முன்னர் அமைச்சின் அல்லது மாகாண செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண் டும். மேலும் சுற்றறிக்கையை மீறி செயற் படும் அதிபர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அமைச்சு ஒருபோதும் தயங்காது.

இதேவேளை, க.பொ.உயர்தர வகுப்பு களுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கென இவ்வருடம் முதல் தகவல் தொழில்நுட்பம் புதியதொரு பாடமாக அறிமுகப்படுத்தப்படு வதால் இவர்களில் அநேகமானவர்களுக்கு பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும்.

இதனடிப்படையில், அதே பாடசாலையில் சாதாரண தரம் வரை படித்து விசேட சித்தி பெற்றிருக்கும் மாணவர்களுக்கு முதலிடமும் கஷ்ட பிரதேசங்களை சேர்ந்த விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைகளை கற்க விரும்பும் மாணவர்களுக்கு 2 ஆம் இடமும் அதே மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு 3 இடமும் ஆட்சேர்ப்பின் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது கட்டாயம் ஆகும்.

அத்துடன், உயர் தரத்திற்கான ஆட்சேர்ப்பு முறையினை கண்டித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்யப்பட்டிருப்பதாக வும் அது தொடர்பில் நியாயமான தீர்மானம் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொழில் வாய்ப்புக்களுக்கு ஏற்ற வகை யில் இலங்கை பிரஜைகளை உருவாக்கு வதே எமது இலக்காகும். அந்த வகையி லேயே தகவல் தொழில்நுட்பத்தை க.பொ.த உயர்தர மாணவர்களுக்காக அறிமுகம் செய் துள்ளோம்

இப்பாடத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபி விருத்தி அமைச்சு இணக்கம் தெரிவித்துள் ளது. இப்பாடம் அறிமுகம் செய்துள்ளமை யானது இவ்வருடம் உயர்தரம் தோற்றவுள்ள மாணவர்களுக்கு கிடைத்த மாபெரும் சந் தர்ப்பம் ஆகும். முதற் கட்டமாக 200 பாட சாலைகளிலேயே இதனை அறிமுகப்படுத்த வுள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி இதற்கு தேவையான உபகரணங்களை பெற்றுக் கொடுக்கும் என 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

2016 ஆம் ஆண்டில் இந்த 200 பாட சாலைகளில் ஒவ்வொன்றும் பத்துக் கோடி பெறுமதியான தகவல் தொழில்நுட்ப உப கரணங்களைக் கொண்டிருக்கும் வகையில் நாம் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றோம் எனவே, வாய்ப்பு கிடைக்கும் மாணவர்கள் தமது தகைமை விருப்பத்திற்கு ஏற்ப தவறாது இப்பாடத்தை தெரிவு செய்வது சிறந்த எதிர் காலத்துக்கு வழி வகுக்கும் எனவும் அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

## கால நீடிப்பு

தேசிய கலை கலாசார திணைக்களத் தினால் நடத்தப்படும் கதை, கட்டுரை, கவிதை போட்டிகளில் தென்மராட்சி பிரதேசமட்ட போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னர் இப்போட்டியின் விண்ணப்ப முடிவுத்திகதி கடந்த 10ஆம்திகதி என அறிவிக் கப்பட்டிருந்த போதிலும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இப் போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் மற்றும் ஏனையோர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திக திக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தென் மராட்சி பிரதேச செயலக கலாசார பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-3-29)

## முன்பள்ளி விளையாட்டு

வள்ளுவர்புரம் ஜீவஜோதி முன்பள்ளி யின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு முன் பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல கல்வி அதிகாரிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகி யோர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ-3-260)

# 85 வீதமான வெளிநாட்டு கடன்கள் வடக்கிற்கே செலவிடப்பட்டுள்ளன

### அமைச்சர் பஷில் கூறுகின்றார்



(கொழும்பு)

வெளிநாட்டுக் கடன்களால் 85 வீதமானவை வடக்கிற்காகவே செலவிடப்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.மதவாச்சி- மடு புகையிரத திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக் களை மீள்குடியேற் றவும் வடமாகாண அபிவிருத்தி பணிகளுக்குமே 85 வீதமான வெளிநாட்டுக் கடன்கள் பயன்படுத்தப்பட்டன என அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மக்கள் தீர்மானங்களை எடுக்கும் போது புத்திசாதுரியமாக தீர்மானங்களை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# எந்தச் சூழ்நிலையிலும் எம்மை பிரிக்க முடியாது

## இந்திய தூதுவர் அசோக் கே காந்தா

இலங்கையுடன் இணைந்து செயற்பட இந்தியா அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் சமாதானமும் சுபீட்சம் அபிவிருத்தி ஆகிய வற்றை ஏற்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங் கப்படுமென இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா தெரிவித்துள்ளார்.

மதவாச்சியில் இருந்து மன்னார்- மடு வரையில் இந்திய அரசாங்கத்தினால் நிர்மா ணிக்கப்பட்ட புகையிரத பாதையின் அங்கு ரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் இடம் பெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

தற்போது இந்தியாவும் இலங்கையும் இணைந்து இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் மேற்கொண்டு வரும் செயற்றிட்டங் களின் ஊடாக இந்த பிரதேச மக்களின் வாழ் க்கை மேம்படுவதுடன் இயல்பு நிலைக்கு திரு ம்பிவிடும் என்றும் அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

அத்துடன் இந்தியா இலங்கையுடன் எப் போதும் இணைந்து செயற்படுவதற்கு அர்ப்ப ணிப்புடன் இருக்கிறது. இலங்கையும் இந் தியாவும் எந்தச் சூழ்நிலையிலும் பிரிக்க முடி யாத நண்பர்கள் என்றும் அவர் சுட்டிக் காட் டியுள்ளார்.

வடமாகாணம் அபிவிருத்தி, நல்லிணக்கம் மட்டுமின்றி ஏனைய பிரதேசங்களிலும் அபி விருத்தியை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்கப் படும்.

தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற் கும் இடையிலான கப்பல் சேவைகளை மீள வும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# புனரமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுர திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் மீள் புனரமைக் கப்பட்ட மணிக்கூட்டு கோபுரம் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகே ஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகி யோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர். விஜயலட்சுமி, யாழ் .அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநா யகம் ஆகியோரும், கௌரவ விருந்தினர் களாக யாழ். மாவட்ட சிங்கர் நிறுவன முகா மையாளர் த.தயாளன், யாழ் சிங்கர் கிளை முகாமையாளர் எஸ். கிரிஸன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)




காப்புறுதி சங்கங்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு அண்மையில் சுட்டிபுரம் அம்மன்கோயில் அருகாமையிலுள்ள தென்னந்தோட்டத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் கலந்து கொண்டு தென்னை அபிவிருத்தி அமைச்சர் ஏ.பி. ஜெகத் புஸ்பகுமார உரையாற்றுவதையும் தென்னை நடுகை முறை தொடர்பில் அமைச்சர்கள் ஏ.பி. ஜெகத் புஸ்பகுமார, கே.என்.டக்ளஸ் தேவானந்தா உட்பட பிரமுகர்களுக்கு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரன் விளக்கமளிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampuriijaffna@gmail.com

# 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் :
19.11.1942



மறைவு :
16.04.2013

## அமரர் வேலுப்பிள்ளை சற்குணானந்தம்


அன்புடைய எம் அருமை அப்பாவே
இன்புடனே நாம் வாழ்ந்திடவே
இணையரிய தேவைகளை பூர்த்தி செய்தீர்
இல்லற வாழ்வுதனில் எமையெல்லாம் இணைத்திட்டீர்
இன்முகம் காட்டியே எம் பிள்ளைகளை அணைத்திருந்தீர்
துன்பம் தரும் நோயும் தொடர்வுற்று வந்ததினால்
என்புருக நிற்கும் எமக்கு இனிய மொழி பகராது
மண்ணின் வாழ்விழந்து மறுவுலகம் சென்றீரோ?
அன்பே எம் ஆருயிர் அப்பாவே
என்றுமே உறங்கிடாது
எம் நெஞ்சில் உம் நினைவலைகள்

சாஸ்திரியார் வளவு,
தும்பளை, பருத்தித்துறை.

(சி-3341)

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### கனகசபை காலிங்கராஜா
### (சின்னமணி)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கை புகுந்த இடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை காலிங்கராஜா அவர்கள் 2013 வைகாசி 11ஆம் திகதி அன்று இணுவிலில் இயற்கை மரணமானார்.

அன்னார், காலஞ்சென்ற கனகசபை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னையா, நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், நேசமலர் அவர்களின் அன்புக் கணவரும், உதயகுமார், விஜயகுமாரி, சசிகுமாரி, நந்தகுமாரி, பாலகுமார், திலீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசமலர், காலஞ்சென்ற சிவானந்தராஜா, சந்திரகுமார், ஆழகானந்தன், குமுதா, சுஜீபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிந்துஜா, சுஜானி, சிவானுஜா, சங்கீர்ணா, சாரங்கன், நிதுர்சா, யதுர்சா, விக்னேஷ், 'ஹரீஷ், ஹரிணி, வைஷினி, வர்ஷினி, அட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும, காலஞ்சென்ற கண்மணி, காலஞ்சென்ற பொன்னம்மா, பூமணி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இணுவில் காரைக்கால் இந்து மாயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
இணுவில் தெற்கு. இணுவில்
தொடர்பு :- க.திலீபன்(மகன்) 0778462355

தகவல்:
குடும்பத்தினர்

(சி-3346)

## மரண அறிவித்தல்



### செல்வராசா பாக்கியம்

யாழ்.சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும் இல.200/26 சிவன் கோயில் வீதி, தோணிக்கல் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் செல்வராசா பாக்கியம் 14.05.13 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் இலட்சுமிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மகளும் அமரர் செல்வராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற சத்தியவதி, காலஞ்சென்ற செல்வநாயகம், தவகுலராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அக்காவும் முருகமூர்த்தி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி, காலஞ்சென்ற நேசமலர், செல்வமலர் , உதயமலர் காலஞ்சென்ற இதயமலர், இராசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 2 மணியளவில் இடம் பெற்று தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்தில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

உ.பிறைசூடி
(A.D.P. - வவுனியா)

(சி-3344)

**தகவல்:** பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்



### மகாதேவன் சதீஸ்குமார்

தொண்டைமானாறு வல்வை வீதியைப் பிறப்பிடமாகவும் லண்டன் ஈஸ்காமை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் சதீஸ்குமார் அவர்கள் 19.04.2013 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் மகாதேவன் - பத்மராணி (வவா) தம்பதியரின் அன்பு மகனும் சதீபன் (லண்டன்), சாயினி (பிரான்ஸ்), அஜந்தினி (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), செல்வனா (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), மயூதினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகனின் (பிரான்ஸ்) மைத்துனரும், ஜெசானி (பிரான்ஸ்), ஜெனிசா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது வசிப்பிடமாகிய Of City London Cemetery, E125 DQ Old Clock Road, Manorpark எனும் இடத்தில் அடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் :** குடும்பத்தினர்
(சி.ஜெயக்கொடி - பெரியப்பா)
மகான்: 94773277969

வல்வை வீதி,
தொண்டைமானாறு.

(சி-3342)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவகாசியில் வெடி விபத்து; இருவர் பலி!

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே உள்ள கிச்சநாயக்கன்பட்டி பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் 2 பேர் பலியாகினர். 14 பேர் காயமடைந்தனர்.

நேற்று காலை வழமை போல் வேலைக்கு வந்த நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது ஒரு அறையில் பட்டாசுகள் பலத்த சத்தத்துடன் வெடித்தது. தொடர்ந்து ஒவ்வொரு அறைக்கும் பட்டாசு தீ பரவியது . இதனால் எங்கும் பட்டாசு வெடிசத்தமாக கேட்டது. இந்த விபத்தில் 2 பேர் பலியானார்கள் 14 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் சிவகாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.



சுயமரியாதைக்காக

# காதலியை இழந்தேன்

## இளமையை மீட்கிறார் கலைஞர்

நான் காதலித்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடியாமல் சுயமரியாதை திருமணம்தான் நடத்திக்கொள்ள வேண்டுமென்று பிடிவாதமாக இருந்தேன். இதனால் நான் காதலித்த பெண் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டாள்.

சுய மரியாதைக் கொள்கைக்காக 1944ஆம் ஆண்டிலேயே காதலித்த பெண்ணை இழந்தவன் நான் என்று கூறியுள்ளார் முன்னாள் தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி.

வடசென்னை ராயபுரம் பகுதி திமுக பிரதிநிதி நான் குட்டி மகன் கரிகாலன்-பிரவிணா திருமணத்தை திமுக தலைவர் கருணாநிதி கோபாலபுரம் இல்லத்தில் நடத்தி வைத்தார்.

அங்கு கருணாநிதி கூறுகையில்,

கோபாலபுரம் இல்லத்தில் மாத்திரம் இதுவரை நடைபெற்ற திருமணங்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்திற்கு மேற்பட்டிருக்கும். நான் வெளியூர்களுக்கு சென்று நடத்தி வைத்த திருமணங்கள், சென்னையில் வேறு பகுதிகளில் நான் நடத்தி வைத்த திருமணங்கள் என்று பார்த்தால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டிருக்கும்.

ஒரு காலத்தில் இப்படிப் பட்ட சுயமரியாதைத் திருமணங்களை நடத்திக்கொளள யாரும் முன் வர மாட்டார்கள். தற்போது அப்படி நடத்திக் கொள்ள முன் வருகிறவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே உள்ளது.

என்னைப் பொறுத்தவரை 13.9.1944இல் நான் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு, நான் காதலித்த பெண்ணை திருமணம் செய்துகொள்ள முடியாமல் சுயமரியாதை திருமணம் தான் நடத்திக்கொள்ள வேணடுமென்று பிடிவாதமாக இருந்தேன். இதனால் நான் காதலித்த பெண் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டாள். சுயமரியாதைக் கொள்கைக்காக 1944ஆம் ஆண்டிலேயே காதலித்த பெண்ணை இழந்தவன் நான்.

இதுவரை இந்த திருமணங்களுக்கு வருகை தந்து வாழ்த்தியவர்கள், கலந்து கொண்டவர்கள் என்ற எண்ணிக்கை இலட்சக்கணக்கில் இருக்கும்.

நீங்கள் ஒரு சபதம் எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் தமிழர்கள் தமிழ் முறையில் திருமணம் செய்து கொள்வது மாத்திரமல்ல தமிழன், தமிழனாக வாழ தமிழ் மொழியை வளர்க்க எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# பலமாகிறது பாதுகாப்பு

பிரதமர் மன்மோகன் சிங் மனைவி குர்சரண் கவுர், காங்., தலைவர் சோனியா, அவரது மகள் பிரியங்கா ஆகியோரின் பாதுகாப்புக்காக, பெண் கொமாண்டோக்களை நியமிக்க, திட்டமிடப்பட்டுள்ளது மத்திய அரசு.

இது தொடர்பாக மத்திய அரசு வட்டாரங்களிலிருந்து வெளியாகியுள்ள தகவல்களின் படி,

பிரதமர் மன்மோகன் சிங், அவரது குடும்பத்தினர், காங்., தலைவர் சோனியா, அவரது மகள் பிரியங்கா, காங., துணை தலைவர் ராகுல், முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உள்ளிட்ட, வி.ஐ.பி.,க்களுக்கு, சிறப்பு பாதுகாப்பு படை (எஸ்.பி.ஜி.,) வீரர்கள், பாதுகாப்பு அளிக்கின்றனர். இந்நிலையில், விரைவில் லோக்சபா தேர்தல் நடைபெறவுள்ளது. அரசியல், வி.ஐ.பி.,க்கள், தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், அவர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்க, மத்திய அரசு முடிவு செய்துள்ளது.குறிப்பாக, பெண், வி.ஐ.பி.,க்களுக்கு, பெண் கொமாண்டோக்களை, பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தவும், திட்டமிடப்பட்டுள்ளது. இதையடுத்து, பிரதமர் மன்மோகன் சிங் மனைவி, குர்சரண் கவுர், காங்., தலைவர், சோனியா, அவரது மகள், பிரியங்கா ஆகியோரின் பாதுகாப்புக்கு, பெண் கொமாண்டோக்களை, நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, மத்திய தொழிலக பாதுகாப்பு படையில் பணியாற்றும் பெண்கள், தேர்வு செய்யப்படவுள்ளனர். தொழிலக பாதுகாப்பு படையில், 5,000 பெண்கள் பணி யாற்றுகின்றனர். இவர்களில், தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டு, பெண வி.ஐ.பி.,க்களின் உள்ளிட்டோரின் பாதுகாப்புக்காக, ஈடுபடுத்தப்பட உள்ளனர்."விருப்பம் உள்ள, 35 வயதுக்குட்பட்டோர், விண்ணப்பிக்கலாம்" என, தொழில் பாதுகாப்பு படை உயரதிகாரிகள், தங்களின் பல்வேறு படைப் பிரிவுகளில் பணியாற்றும் பெண் கொமாண டோக்களுக்கு அறிவுறுத்தி உள்ளனர்.



## எல்லைப் பிரச்சினையை தீர்க்க சீனாவுடன்

# பேச்சுக்குத் தயார்

## இந்தியா அறிவிப்பு

எல்லைப் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வு காணத் தயாராகவே இருக்கிறோம் என்று சீனாவுக்கு இந்தியா பதிலளித்துள்ளது.

முன்னதாக இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகாண விரும்புகிறோம் என்று சீனா தெரிவித்திருந்தது.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்டுள்ள வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன்,

எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண்பது இருதரப்பு நலனுக்கு வழி வகுக்கும். பாதுகாப்பு நோக்கில் இருநாடுகளின் முக்கிய நோக்கமாக இது இருக்க வேண்டும் என்றார்.



மனிதன் மாறிவிட்டான்...

# ஆசிரியரின் திருவிளையாடல்

ஜம்மு காஷ்மீர் மாநிலம் அனந்தநாக் மாவட்டத்தில் உள்ள அரசு பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றி வந்த பஷிர் அகமது தன்னிடம் படிக்கும் பாடசாலை மாணவர்களை வீட்டிற்கு வரவழைதது தனக்கு மசாஜ் செய்து விடும் படி கட்டளையிட்டார். மாணவர்களும் ஆசிரியர் சொல்வதை தட்டமுடியாமல் வீட்டுக்குச் சென்று மசாஜ் செய்தனர்.

இந்தக் காட்சியை ஆசிரியர் பஷிர் முகமது மாணவர்களுக்கு தெரியாமல் படம் எடுத்துள்ளார். அது மட்டுமல்லாமல் அந்த படத்தை பேஸ் புக்கிலும் வெளியிட்டு உள்ளார். இந்த படத்தை பார்த்தவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்த தகவல் பாடசாலை முழுவதும் பரவியது. இது பற்றி தகவல் அறிந்ததும் மாணவர்களின் பெற்றோர்கள் கொதித்தெழுந்தனர் ஆசிரியரை பாடசாலையில் இருந்து நீக்கவேண்டும் என கோரிக்கை வைத்தனர். இதை தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் அவரை பணியில் இருந்து இடைநிறுத்தியுள்ளது. இச்செயலுக்கு மாநில கல்வித்துறை இயக்குநர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## கடுகதி விசா சேவை

இந்தியாவில் இருந்து அவசரமாக பிரிட்டன் செல்ல விரும்புவோருக்கு முன்னுரிமை விசாக்களை அளிக்கும் சேவையை பிரிட்டன் அரசு அறிமுகம் செய்துள்ளது.

இந்தியர்களுக்கு விசாவைக் கேட்ட நாளிலேயே அளிக்கும் முறையை அமுல்படுத்தப்போவதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன், கடந்த பெப்ரவரி மாதம் இந்தியப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அறிவித்தார். இதன்படி, இந்தியாவில் உள்ள பிரிட்டன் உள்துறை அலுவலகங்களில் இந்தச் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இவ்வாறு முன்னுரிமை விசாக்களை பிரிட்டன் அளிப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக இந்தியாவுக்கான பிரிட்டன் தூதர் ஜேம்ஸ் பெவன் கூறுகையில்;

வேறு எந்த நாட்டுக்கும் முன்பாக, இந்தியாவில் சிறப்பு முன்னுரிமை விசாக்கள் வழங்கும் சேவை தொடங்கப்பட்டது மகிழ்ச்சி தருகிறது. பிரிட்டன் செல்ல விரும்பும் இந்தியர்கள் முதன் முறையாக விசா கோரிய அதே நாளில் அதைப் பெற உள்ளனர். ஏற்கனவே அளிக்கப்பட்டு வரும் விசா சேவையை மேலும் சிறப்பானதாக மாற்ற வேண்டும் என்ற எங்கள் அர்ப்பணிப்பை இது உணர்த்துகிறது. இப்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய சேவை, வர்த்தகத்துக்கு பெரிதும் உதவும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத வெறியன் , ஆபிரிக்க எருமை போல் இருப்பவன்.
நேரேதான் பார்ப்பான். பக்கங்களில் திரும்பான்.
-பாஸ்டர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நினைவாலயங்கள் கட்டப்பட வேண்டும்

2009 ஆம் ஆண்டு மே 18-ம் திகதி மனிதர்களை மனிதர்கள் உண்டு உருசித்து ஏப்பமிட்ட இறுதிநாள்.

இனத்தின் பெயரால் ஒற்றுமைப்பட முடியாமல் போன சிங்கள – தமிழ் இனங்கள் ஒன்றையொன்று நம்பவும் ஏற்றுக் கொள்ளவும் விட்டுக் கொடுக்கவும் முடியாமல் போனதன் விளைவாக இலங்கை மாதா கண்ணீரையும் செந்நீரையும் சிந்தித் தள்ளினாள்.

உலகின் வரலாறுகள் மனித இழப்புக்களில் இருந்துதான் உற்பத்தியாகின்றன என்ற ஒரு அறிஞனின் கருத்தியலோடு எங்கள் நாட்டின் வரலாறும் பொருந்திக் கொள்ளும்.

2009-ம் ஆண்டு மே 18 இன் முடிபுகள் தமிழர்கள் மறக்கமுடியாத பேரிழப்புக்களைத் தந்தது என்ற துன்பத்துக்கு அப்பால், இந்த இழப்புகள் இந்த நாட்டில் பெரும்பான்மை இனத்துக்கு வெற்றி நாளாகவும், விழாவெடுக்கும் திருநாளாகவும் இருந்ததுதான் மிகப்பெரும் கொடுமை.

மூவின மக்கள் வாழும் இலங்கையில் தமிழர்களின் உயிரைப்பறிப்பதும் தமிழ் மக்களை வதைப்பதும் சிங்களவர்களுக்கு வெற்றி நாளாக அமையுமென்று யாரேனும் கருதினால், அக்கருத்தை முதன்மைப்படுத்தி யாரேனும் விழா எடுத்தால், இத்தகையவர்கள் வரலாறுகள் மாற்றமுறுமென்பதை அறியாதவர்கள் என்பது மட்டுமன்றி,

காலமாற்றத்தில் இழப்புகளும் இடம் மாறலாம் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்களுமாக இருப்பார்கள் என்று கூறிக் கொள்ளலாம்.

எதுவாயினும் வன்னிப் போரில் ஏற்பட்ட இழப்புகள் இன்னமும் கண்ணீராய், கனவுகளாய், நினைவுகளாய் இதயத்தைப் பிழியவே செய்கின்றன.

இந்த இழப்புகளுக்காக இலங்கையின் பெரும்பான்மை இனம் என்றோ ஒருநாள் இரக்கப்படும்.

ஓ! தமிழ் மக்களே! உங்களுக்கு நாங்கள் செய்த குற்றத்துக்காக, எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கேட்கும் என்பது நிறுத்திட்டமான உண்மை.

இந்த உண்மை; எங்களின், உங்களின் வாழ்வுக் காலங்களில் சாத்தியப்படாமல் போகலாம் ஆனால் என்றோ ஒரு காலத்தில் இது நடந்தே தீரும்.

அதற்கு முன்னதாக வன்னிப் போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நினைவாலயம் அமைக்கப்பட வேண்டும்.

வன்னி மாவட்டங்கள் தோறும் இந்த நினைவாலங்கள் அமைக்கப்பட்டு அங்கு பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

வன்னிப் போரில் உயிரிழந்த படையினரின் நினைவுத் தூபிகள் வன்னி மண்ணில் அமைக்கப்படுவது ஏற்புடையதாயின் அதே மண்ணில் வாழ்ந்து, போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நினைவாலயம் அமைப்பது நியாயமானதாகும்.

இந்த நியாயத்தை துட்டகைமுனு பரம்பரை நிராகரிக்க நியாயம் இருக்கமுடியாது.

# 27 வர்த்தகர்களுக்கு அபராதம்; 5 வர்த்தகர்களுக்குப் பிடியாணை

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சட்டத்திற்கு முரணாக நுகர்வோருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொருட்களை விற்பனை செய்த 32 வர்த்தகர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது. இதன்படி 27 வர்த்தகர்களுக்கு ஒரு இலட்சத்து 2ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு வழக்கிற்கு சமூகமளிக்காத 5 வர்த்தகர்களுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ந. சிவசீலன் தெரிவித்தார். இதில் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் 11 வர்த்தகர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அது நிரூபிக்கப்பட்டதனால் ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும் தலா 5ஆயிரம் ரூபா (55ஆயிரம்) அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இதனைவிட மல்லாகம் நீதவான் நீதிமன்றில் 21 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்ட போதும் நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது 16 வர்த்தகர்கள் மட்டுமே சமூகமளித்திருந்தனர்.

காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை, பொருட்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்தமை, விலைப் பட்டியலில் காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்தமை போன்ற பல குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, வழக்குக்கு சமூகமளித்த 16 வர்த்தகர்களுக்கு மொத்தமாக 47 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதோடு சமூகமளிக்காத 5 வர்த்தகர்களுக்கும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது என பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-4-6)

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

யாழ்.நாவாந்துறைப் பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்று முற்பகல் 10 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான யாழ்.நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த பிலேந்திரன் யோகராசா (வயது 41) என்ற குடும்பஸ்தரே சடலமாக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். இதன்பின்பு சடலம் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தக் குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் உறவினர்கள் தெரிவிக்கும் போது,மனைவி, பிள்ளைகளின் நகைகளை அடகுவைத்து அதிகளவில் கடன் கொடுத்து ஏமாந்துவிட்டார். அதன் காரணமாக விரக்தியுற்ற நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார். இந் நிலையில், நேற்று முன்தினம் மாலை இறந்துவிட்டார் என அறிந்தோம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# சமாதானப் பெருந்தொனி

புதுக்குடியிருப்பு இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபையின் ஏற்பாட்டில் சமாதான பெருந்தொனி எனும் இயேசு விடுதலை கொடுக்கிறார் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் தினமும் மாலை 4 மணிக்கு முல்லைத்தீவில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கு முன்பாகவுள்ள பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (அ-2)

# பதினான்கு வயதுச் சிறுமி சிறுவர் நன்னடத்தை பிரிவில்

(மிருசுவில்)

சிறுவயதில் காதல் திருமணம் செய்து கொண்ட சிறுமியை சிறுவர் நன்னடத்தைப் பிரிவிற்கு அனுப்பி வைக்குமாறும் இளைஞனை விளக்க மறியலில் வைக்குமாறும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி மீது காதல் கொண்ட 18 வயது இளைஞன் தனது இடமான மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்திற்கு அழைத்து வந்து வாழ்ந்து வந்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நெல்லியடி பொலிஸாருக்கு சிறுமியின் பெற்றோர் முறையிட்டதைத் தொடர்ந்து சிறுமி இருக்கும் இடம் சென்ற பொலிஸார் சிறுமியைக் கண்டித்ததுடன் இருவரையும் அழைத்துச்சென்று சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் மேற்குறித்தவாறு உத்தரவிட்டார். (அ-3-85)

# வலய மட்ட போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான வலய மட்ட மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் மு/ மல்லாவி மத்திய கல்லூரி மைதானத் தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்திற்கேற்ப மாணவர்களை அனுப்பி வைக்குமாறு அவர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். (அ-3-15)

## சத்திய தரிசனம்



உங்களில் சிலருக்கு சோதனைகளும் ஏமாற்றங்களும் ஏற்படும்போது நான் உங்களைப் புறக்கணித்துவிட்டதாகத் தோன்றலாம். ஆனால் இவை போன்ற கஷ்டங்களே உங்களுடைய குணத்தை வலுப்படுத்தவும் உங்களுடைய நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்தவும் செய்யும். இவற்றில் படத்தை மாட்டுவதற்காக ஆணி அடிக்கும்போது அது நன்றாக பதிந்திருக்கிறதா, படத்தைத் தாங்கும் வலிமை உள்ளதா என்று பார்க்க ஆட்டிப் பார்க்கிறோம் அல்லவா? அதுபோலவே நம்முடைய மனதிலிருக்கும் பகவானின் படம் (உருவம்) கீழே விழுந்து உடைந்து விடாமல் இருக்க இதயத்தில் அடிக்கப்பட்டிருக்கும் பகவத் நாமம் என்ற ஆணியை சோதனைகள் மூலம் அசைத்தும் பார்த்து அதன் உறுதியை தீர்மானிக்கிறோம்.

# குருக்கட்டு விநாயகருக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வட அல்வாய் குருக்கட்டு அரசடி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.30க்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.

மகோற்சவத்தின் 8 ஆம் நாளான 23 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் 9ஆம் நாளான் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10ஆம் திருவிழாவான 25 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தமும் நடைபெறவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (அ)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வாசற்படியில் உட்காரக்கூடாது ஏன்?

வாசற்படியில் இருக்கும் சிறுவர்களை பாட்டிமார் விரட்டியடிப்பதுண்டு. வாசற்படியில் அமரக்கூடாது என்று அன்புடன் உபதேசிப்பதும் உண்டு. வாசல் வழியாக வரும்போது நபர்கள் தட்டி விழும் சாத்தியம் உள்ளதாலே இவ்வாறு கூறுகின்றனர் என்று கருதி வந்தோம்.

ஆனால், வாசற்படியிலோ இருக்கக்கூடாது என்பது சரியான காரணத்துடன் என்பது கண்டறிந்துள்ளனர். டௌசிங்ராட் என்ற கருவியை வாசற்படியில் பிடித்தால் வாசற்படியிலிருந்து எதிர்சக்திகள் (நெகடிவ்ஃ போர்கஸ்) வெளியாவது காணலாம். இதனால் வாசற்படியில் அமர்ந்தால் நம் உடலில் எதிர் சக்திகள் புகுந்து செல்லும்.

இதை அன்றே அறிந்திருந்த ஆசாரியர்கள் வாசற்படியில் உட்காருவதை சக்தியாக எதிர்த்திருந்தனர். வாசற்படிக்கு உட்பக்கமோ வெளிப்பக்கமோ நின்று எதையும் வாங்கவோ, கொடுக்கவோகூடதென்பதற்கும் சரியான காரணமும் இதுவேதான்.

வாசல் நிலையின் நான்கு பக்கங்களும் சமசதுர வடிவிலுள்ளதானால் நெகடிவ் சக்தி வெளிவருகின்றது. வாஸ்து சாஸ்திரத்தை மிக முக்கியமாகக் கருதும் சீனமக்கள் தங்கள் வீடுகளில் அமைக்கும் வாசல்கள் மற்றும் ஜன்னல்களின் நிலைகள் வேறு வடிவத்தில் மேல்பாகம் நோக்கி வளைந்திருக்கக் காணலாம். இது நெகடிவ் சக்திகளைத் தவிர்ப்பதற்காகவே நமது கோயில் வாசல்களிலும் இவ்விதமே அமைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடுபிடிக்கிறது சூதாட்டம்

## சொத்துக்களை இழந்து பலர் திண்டாட்டம்

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் கோடிக் கணக்கில் பணம் புரள்கிறது. இதனால் ஏனைய எந்த போட்டிக்கும் இல்லாத அளவில் ஐ.பி.எல். போட்டியில் சூதாட்டம், கொடி கட்டி பறக்கிறது.

எந்த அணி வெற்றி பெறும், யார் முதலில் துடுப்பெடுத்தாடுவார்கள், அணியில் இடம் பெறும் வீரர்கள் யார், ஒரு அணியின் மொத்த ஓட்டம், வீரர்களின் சிக்சர், கைப்பற்றும் விக்கெட் என்று பல்வேறு வகையில் ஐ.பி.எல். சூதாட்டம் நடைபெறுகிறது.

பணம் வைத்து நடத்தப்படும் இந்த சூதாட்டத்துக்கு இந்தியாவில் அனுமதி கிடையாது. சட்ட விரோதமாக இது நடத்தப்படுகிறது. மும்பையில்தான் அதிக அளவில் ஐ.பி.எல். சூதாட்டம் நடைபெறுகிறது. சென்னையில் சௌகார்பேட்டை பகுதியில் வசிக்கும் வடமாநிலத்தை சேர்ந்தவர்கள் ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

மிகப் பெரிய அளவில் பணம் கிடைக்கும் என்பதால் இந்த சட்டவிரோத செயல்களை செய்கிறார்கள். இதில் பணத்தை சம்பாதிப்பவர்களும் உண்டு. அதைவிட நட்டம் அடைந்தவர்களும் உள்ளனர். ஐ.பி.எல். சூதாட்டத்தில் சௌகார்பேட்டை பகுதியில் சிலர் வீடு, நகையை இழந்துள்ளனர்.

அதிக பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசையில் அவர்கள் தங்களது உடமைகளை இழந்து பரிதவித்துள்ளார்கள். 22 வயது வாலிபர் ஒருவர் தனது மனைவியின் நகையை விற்று சூதாட்ட தரகரிடம் பந்தயம் செய்து பணத்தை இழந்து உள்ளார்.

அவர் கூறும்போது, "எனது உறவினர் ஒருவர் கிரிக்கெட் சூதாட்டத்தில் வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறார். எனது குடும்பத்தினர் செய்யும் செருப்பு வியாபாரத்தில் ஈடுபட எனக்கு விருப்பம் இல்லை. சூதாட்டத்தில் ஈடுபட்டு குறைந்த காலத்தில் அதிக அளவில் பணம் சம்பாதிக்க வேண்டும்.

எனது குடும்பத்தில் நான்தான் பணக்காரராக இருக்க வேண்டும் என்று விரும்பினேன். தற்போது மனைவியின் நகையை இழந்து நஷ்டப்பட்டு உள்ளேன்" என்றார். 27 வயதான வங்கி ஊழியர் ஐ.பி.எல். சூதாட்டத்தில் ஏராளமான பணத்தை இழந்துள்ளார்.

அந்த பணத்தை கொடுப்பதற்காக ரூ.40 இலட்சம் மதிப்புள்ள தனது வீட்டை விற்றுள்ளார். தற்போது அவர் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். இனி ஒருபோதும் சூதாட்டத்தில் ஈடுபட மாட்டேன் என்று அவர் கூறியுள்ளார்.

# மதுவுக்கு முக்கியத்துவம்?

மதுபான விளம்பரங்களை ஊக்குவிப்பதாக பெங்களூர் அணி மீது டில்லி நிறுவனம் பரபரப்பு புகாரினை அளித்துள்ளது.

ஆறாவது பிறிமியர் தொடரில் பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி அணி வீரர்கள், நடுவர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் அணியும் ஜெர்சியின் முன், பின் பக்கங்களில் மதுபானத்தின் பெயரை பொறித்துள்ளனர். தவிர வீரர்களின் ரி-சேர்ட்டின் வலது கையிலும், இது உள்ளது.

கேபிள் டிவி நெட்வொர்க் 1994 விதியின் படி, நேரடியாக அல்லது மறைமுகமாக சிகரெட், புகையிலை, வைன், அற்ககோல் உள்ளிட்ட போதை தரும் பொருட்களுக்கு விளம்பரம் செய்யக்கூடாது என்றுள்ளது.

இதை மீறும் வகையில் பெங்களூர் அணி செயற்படுவதாக புகார் எழுந்துள்ளது. இதுகுறித்து மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்துக்கு டில்லியை சேர்ந்த அரசு சாரா நிறுவனத்தின் சிரேஷ்ட இயக்குநர் மோனிகா அரோரா, சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதில், அணி விளம்பரம், பத்திரிகையாளர் சந்திப்பு போன்றவற்றில் மதுபானத்தின் பெயரை தெளிவாக விளம்பரம் செய்து விதிகளை மீறுகின்றனர்.

சென்னை, ராஜஸ்தான், பஞ்சாப் அணி இப்படிச் செய்வது இல்லை. இது தொடர்பாக பெங்களூர் அணி நிர்வாகம் மீது நடவடிக்கை எடுத்து, உடனடியாக தடை செய்ய வேண்டும்.

தற்போது அணியும் ஜெர்சிகளை திரும்பபெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

### ஐ.பி.எல் இல் விளையாடாதது

# மினி உலகக் கிண்ணத்தில் சிறப்பாக விளையாட உதவும்

## பாக்.அணித் தலைவர்



ஐபிஎல் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் விளையாடாதது, மினி உலகக் கிண்ணப் போட்டியில் சிறப்பாக விள்ளயாட உதவும் என்று பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.

ஐபிஎல் போட்டியில் பங்கேற்றுள்ள வீரர்களை விட புத்துணர்வுடன் எங்கள் வீரர்கள் மினி உலகக் கிண்ணப் போட்டியை எதிர்கொள்வர் என்றும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணியினர் பிரிட்டனுக்கு செவ்வாய்க்கிழமை புறப்பட்டுச் சென்றனர். அதற்கு முன் செய்தியாளர்களிடம் மிஸ்பா கூறுகையில்,

ஐபிஎல் என்பது நீண்ட நாடகள் விளையாடக் கூடிய போட்டியாகும். இதில், வீரர்களின் பயணம் நெடியது. அதனால், இப்போட்டியில் பங்கேற்றுள்ள ஏனைய நாட்டு வீரர்களுக்கு ஓய்வு இருக்காது. நல்ல ஓய்வுக்குப் பின்பு எங்கள் அணி வீரர்கள் மினி உலகக் கிண்ணப் போட்டியில் களம் காண உள்ளோம்.

இப்போட்டிக்கு முன்பு ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளுடன் ஒரு நாள் ஆட்டங்களில் விளையாட இருப்பது சிறந்ததாகும். இது, எங்கள் அணியில் உள்ள இளம் வீரர்களின் திறமையை வெளிக்கொண்டுவர உதவும்.

மினி உலகக் கிண்ணப் போட்டியில் எங்கள் பிரிவில் இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடம் பெற்றுள்ளன. அதனால் இப்போட்டி மிகவும் சவாலானதாக இருக்கும். இந்தியாவுடன் எங்கு விளையாடினாலும் அதில் நெருக்கடி அதிகமாக இருக்கும் என்றார்.

# புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு பணியில் யுவராஜ்



புற்றுநோய் பாதிப்பில் இருந்து போராடி மீண்ட கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங், தீவிர பயிற்சிக்குப் பின்பு இந்திய அணியிலும் இடம்பிடித்தார்.

இதையடுத்து மக்களிடையே புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் தீவிர அக்கறை காட்டி வருகிறார்.

இந்நிலையில், ஜார்க்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் இலவச புற்றுநோய் கண்டறியும் மையத்தை யுவராஜ் சிங் தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய யுவராஜ் சிங், "புற்றுநோய் வந்தால் குணமாகாது, இறந்துவிடுவோம் என்று மக்கள் நினைக்கின்றனர். ஆனால், இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி, உடனடியாக பரிசோதனை செய்து சிகிச்சை எடுத்தால் குணமடையலாம். இந்த இலவச பரிசோதனை மையம் பற்றி உங்கள் நண்பர்களுக்கு தெரியப்படுத்துங்கள்" என்று கேட்டுக்கொண்டார்.

அப்போது, ஏழைகளுக்கு இலவசமாக சிகிச்சை அளிக்க திட்டம் உள்ளதா? என்று நிருபர்கள் கேட்டபோது, "எதிர்காலத்தில் அதுபற்றி முடிவு செய்வேன். ஆனால், இப்போதைய, சேவை நோயைக் கண்டறிவது மட்டும் தான்" என்றார்.

யுவராஜ் சிங்கின் 'யூவிகேன்' அமைப்புடன், அப்போலோ கிலனீகிள்ஸ் புற்றுநோய் மருத்துவமனை இணைந்து, கிழக்கு பிராந்தியங்களில் இலவச பரிசோதனை முகாம்கள் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# 3 அணிகள் தயார்

6ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த மாதம் 3-ஆம் திகதி ஆரம்பமாகியது. இந்தப் போட்டியில் 9 அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

'லீக்' முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெறும். இதுவரை 66 ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன.

நேற்று முன்தினம் பெங்களூரில் நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் அணியிடம் பெங்களூர் அணி தோற்றது. அந்த அணியின் இந்த தோல்வியால் 3 அணிகள் 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெற்றது உறுதியானது.

சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் ஆகிய அணிகள் 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெற்றன. சென்னை அணி நேற்று முன்தினம் டில்லியை வீழ்த்தும் முன்பே இந்த 3 அணிகளும் உறுதி செய்யப்பட்டன.

பிளேஆப் சுற்றில் நுழையும் 4ஆவது அணி எது என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் உள்ளது. இதில் ஐதராபாத், பெங்களூர் அணிகளுக்கு இடையேயான போட்டி நிலவும்.

இன்றைய ஆட்டம்
இரவு 8 மணி

DELHI DAREDEVILS vs KINGS XI PUNJAB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றியை உதைத்த பதான் புனே 7 ஓட்டத்தால் வென்றது

பதான் செய்த தவறால் வெற்றி பெற வேண்டிய போட்டி தோல்வியில் முடிபடைந்தது.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் 65ஆவது போட்டியில் புனே வாரியர்ஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் பூனே வொரியர்ஸ் அணி 7 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

ராஞ்சியில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற புனே வொரியர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக் களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது விக்கெட்டுக்காக 41 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களையும், மூன்றாவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களையும் பகிர்ந்திருந்தது. இதன் காரணமாகப் பலமான ஓட்ட எண்ணிக்கயை அவ்வணி பெற்றிருந்தது.

துடுப்பாட்டத்தில் பூனே வாரியர்ஸ்அணிசார்பாக மனிஷ்பாண்டே



47 பந்துகளில் 66 ஓட்டங்களையும், ஆரொன் பின்ச் 32 பந்துகளில் 48 ஓட்டங்களையும், யுவராஜ் சிங் 20 பந்துகளில் 30 ஓட்டங்களையும், றொபின் உத்தப்பா 21 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சார்பாக சச்சித்திர சேனநாயக்க 22 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜக்ஸ் கலிஸ் 48 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

171 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 7 ஓட்டங்களால் தோல்வியடைநதது.

ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்த அவ்வணி, ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய போதிலும், தொடர்ந்து 4ஆவது விக்கெட்டுக்காக 98 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தது. ஆனால், விக்கெட்டுக்கள் தொடர்ச்சியாக வீழ்த்தப்பட்டிருந்தன.



துடுப்பாட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடாஸ் அணி சார்பாக யூசுப் பதான் 44 பந்துகளில் 72 ஓட்டங்களைப் பெற்று களத்தடுப்புக்கு இடையூறுவிளைவித்தமைக்காக ஆட்டமிழப்பு வழங்கப்பட்டார்.

இம்முறையில் ஐ.பி.எல் போட்டியில் ஆட்டமிழந்த முதலாவது வீரராக அவர் மாறினார். தவிர, றியன் ரென் டூஸ்காட் டா 30 பந்துகளில் 42 ஓட்டங்களைப பெற்றார்.


பந்துவீச்சில் புனே வாரியர்ஸ் அணி சார்பாக வெய்ன் பார்னெல் 2 விக்கெட்டுக்களையும், புவனேஷ்வர் குமார், ஈஷ்வர் பாண்டே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக புனே அணியின் மனிஷ் பாண்டே தெரிவானார்.




# ராஜஸ்தானை வீழ்த்தி மும்பை திரில் வெற்றி

ராஜஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி இறுதி ஓவரில் 14 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றுள்ளது.



6-வது ஐ.பி.எல்.தொடரின் 66 வது போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடந்தது.

இதில் உள்ளூர் அணியான மும்பை இந்தியன்ஸ் அணி ராஜஸதான் றோயல்ஸ் அணியைச் சந்தித்தது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் றோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பாடக் களமிறங்கிய மும்பை அணி ராரியின் சிறந்த துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 166 என்ற ஸ்திரமான இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரம்ப வீரராக களமிறங்கிய ராரே 37 பந்துகளில் 8 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 59 ஓட்டங்களையும், மற்றொரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மக்ஸ்வெல் 17 பந்துகளில் 3 சிக்ஸர்களுடன் 23 ஓட்டங்களை எடுத்தனா.

பந்துவீச்சில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சார்பாக போல்க்னர், வோட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

167 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பாடக் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, ஆரம்பத்தில் வேகமாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தாலும் பின்னர் சுதாகரித்துக் கொண்டு ஓட்டங்களை எடுத்தது.

எனினும் அவ்வணியால் 20 ஓவர்களின் முடிபில் 7 விக் கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களையே பெற முடிந்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஹாட்ஜ் 39, பின்னி ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை அணி சார்பாக ஜோன்சன், குல்கர்னி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் ராரி தெரிவானார்.

# மல்லிகை பூவுடன் சென்னையை கலக்கினார் தோனி மனைவி

இந்திய அணித்தலைவர் தோனியைப் போல அவரது மனைவி சாக்ஷி சிங்குக்கும் தனியாக பெரும் ரசிகர் கூட்டமும், சங்கமும் வந்துவிடும் போலத் தெரிகிறது.

அந்த அளவுக்கு ஒவ்வொரு முறையும் அவர் ஏதாவது செய்து அனைவரையும் கவாந்திழுத்து விடுகிறார்.

தனது அழகான மேனரிசங்களால் ஐ.பி.எல் போட்டியைக் காண வரும் ரசிகர்களைக் கவர்ந்திழுத்துக் கொண்டிருக்கும் சாக்ஷி, நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் சென்னை ரசிகா களின் மனங் களைக கொள்ளை கொண்டு விட்டார்.



மனம் மயக்கும் மனதைக் கொள்ளை கொள்ளும் மல்லிகைப் பூவை கையல் சுற்றியபடி மைதானத்திற்கு வந்திருந்த சாக்ஷி மீதுதான் அத்தனைப பேரின் கண்களும் இருந்தன.

மைனர்கள் கையில் மல்லிகைப் பூவை சுற்றிக் கொண்டு சுற்றுவதுபோல சாக்ஷி நேற்று தனது கையில் மல்லிகைப் பூவை வாங்கி சுற்றி விட்டிருந்தார்.

மேலும் அந்த மல்லிகைப் பூவை அடிக்கடி நுகர்ந்து பார்த்து அதன் வாசத்தை அனுபவித்தார்.

மல்லிகைப் பூவை அடிக்கடி தனது விரல்களால் தடவிப் பார்த்தபடியும், தனது முகத்தில் வைத்து செல்லமாக உரசியபடியும் மல்லிகையின்சுகந்தத்தை அனுபவித்தார்சாக்ஷி.

மல்லிகையை கையில் வைத்திருந்ததாலோ என்னவோ, தோனி துடுப்பெடுத்தாடும் போதெல்லாம் உற்சாகமாக ஊக்கப்படுத்தியபடி இருந்தார் சாக்ஷி.

ஒருமுறை மொஹித் சர்மா வீசிய பந்தைப் பிடிக்க முயன்ற தோனிக்கு பந்து தாடையில் பட்டு விழுந்தது.

இதனால் லேசான வலியால் துடித்தார் தோனி. ஆனால் அதை விட வேகமாக துடித்தார் சாக்ஷி.

சாக்ஷிக்கு தமிழ்நாட்டில் ரசிகர்கள் மன்றம் வைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி சுவீகரிப்பிற்...

மாகாணத்தின் சில பகுதிகளில் காணி சுவீகரிப்பு தொடர்பில் அரசாங்கம் விடுத்துள்ள இரண்டு அறிவிப்புக்களின் அடிப்படையில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயம் என்ற அடிப்படையில் காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக மனுவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டம் 2011ஆம் ஆண்டு ரத்து செய்யப்பட்டதனைத் தொடர்ந்து உயர் பாதுகாப்பு வலயங்களுக்காக இவ்வாறு காணிகளை சுவீகரிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் காணி சுவீகரிப்பு அதிகாரி, காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர், யாழ்ப்பாண மாவட்ட காணி அளவை அதிகாரி ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (எ-11)

## அதிகாரம் இல்லாத...

மாகாணசபை தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடும் என நான் நம்பவில்லை.

நாம் அப்படி ஒரு நிலைமையை வரவேற்கப்போவதும் இல்லை. இந்நிலையில் கூட்டமைப்பு இல்லாமல், வடக்கில் அரசாங்கம் மாகாணசபை தேர்தல் நடத்துமானால், அது மணமக்கள் இல்லாமல் திருமணம் நடத்துவது போன்றதாகும்.

இந்த நெருக்கடி நிலைமையை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என' ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற, அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாட்டில் சிங்கள மொழியில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இந்த மாகாண சபையை ஏதோ காணக்கிடைக்காத பெருமதீர்வாக கருதி தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருப்பதாக தென்னிலங்கையில் எவரும் நினைத்து விடக் கூடாது. எனக்கு தெரிய வடக்கில் அப்படி ஒரு நிலைமை இல்லை.

இந்த மாகாண சபை முறைமையை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று சொல்லுபவர்களும் வடக்கில் இருக்கிறார்கள்.

இந்நிலையில் சிங்கள தீவிரவாதிகள் சொல்லுகின்றார்கள் என்று சொல்லி, இன்று சட்டப் படி மாகாணசபைக்கு இருக்கும் அதிகாரங்களை வெட்டி குறைக்கும் விஷப்பரீட்சையில் இறங்க வேண்டாம் என அரசாங்கத்துக்கு கூறுகின்றேன்.

நவம்பரில் பொதுநலவாய மாநாடு, செப்டம்பரில் வட மாகாணசபை தேர்தல் என்று ஒரு இரகசிய ஒப்பந்தம் இருப்பது விமல் வீரவன்சவுக்கு தெரியாதா? சம்பிக்க ரணவக்கவுக்கு தெரியாதா? அரசாங்கம் இத்தகைய ஒரு சிக்கலில் இன்று சிக்கி இருப்பது இவர்களுக்கு தெரியாதா?

ஆகவே அரசாங்கம் வடக்கில் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும். ஆனால், தீவிரவாதிகள் எதிர்க்கிறார்கள் என்று சொல்லி 19ஆம் திருத்தம் கொண்டு வந்து, அதிகாரங்களை வெட்டி குறைத்து, சர்வதேசத்தையும் மீண்டும் ஏமாற்றி, குறுக்கு வழியில் வடக்கில் மாகாணசபை தேர்தலில் நடத்த அரசு முயற்சி செய்தால் அது பாரதூர விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்க விரும்புகின்றேன்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவா மனோ கணேசன் தனதுரையில் தெரிவித்தார். (எ-11)

## குழப்பத்தில்...

ஜயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு பான்ஸ் பிளேஸில் நேற்று புதன் கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசாங்கம் உள்ளது. இதற்கான உறுதிமொழியை எதிர்வரும் நவம்பர் மாதம் இடம் பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள அரச தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் அரசில் அங்கம் வகிக்கும் சகபாடிகளான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க போன்றோர் வடக்கு தேர்தலை நடத்த வேண்டாமென ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதா இல்லையா என்ற குழப்ப நிலையில் உள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (எ-11)


அரிய வாய்ப்பு

கனடாவில் படிக்க உழைக்க 2 மாதங்களில் செல்லலாம்

A/L, O/L அவசியமில்லை

6 பேருக்கே அரிய வாய்ப்பு
சட்ட ஆலோசனைகளிற்கு

(C-3347)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016
021 568 9090




## வடக்குத் தேர்...

வடமாகாண சபை தோதலுக்கு பின்னரே நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

## காணி சுவீ...

றுக் கொண்டதா? இல்லையா? என்பது தொடர்பில் தான் எதுவும் கூறமுடியாது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரியான சிவசுவாமி அலுவலகத்திற்கு சமுகமளிக்கவில்லை என மாவட்டச் செயலக வட்டாரத் தகவல்கள் மூலம் அறிய முடிந்தது.

கடந்த மார்ச் 12-ம் திகதி யாழ்.மாவட்டச் செயலகத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் அமைச்சர் பண்டார தென்னக்கோனினால் திறந்து வைக்கப்பட்டது.

இதனையடுத்து காணி சுவீகரிப்பு அதிகாரி ஆ.சிவசுவாமி நியமிக்கப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் வலி.வடக்கு கிழக்குப் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணி படையினரின் தேவைக்காக சுவீகரிப்பதாகவும் காணி அலுவலரின் கையொப்பத்துடன் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டது.

இதனைவிட மானிப்பாய் பிரதேசத்திலும் காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்டன.

இந்நிலையில், யாழ்.மாவட்ட காணி சுவீகரிப்பு அதிகாரி ஆ.சிவசுவாமி கடந்த இரு வாரங்களுக்கு மேலாக அலுவலகத்திற்கு சமுகமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இவரின் மீது காணி சுவீகரிப்புத் தொடர்பில் அரச மட்டத்திலிருந்து அதிக அழுத்தங்கள் வந்ததாலேயே அவர் இராஜினமாச் செய்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-6)

## விசாரணை...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்புகளைப் பேணுவோர் போன்ற தரப்பினருக்கு இலங்கையில் பூரண பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கருத்துச் சுதந்திரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாற்றுக் கருத்துக்களை வெளியிடும் தரப்பினர் மீது தாக்குதல் நடத்தியதனை அரச்ாங்கம் பகிரங்கமாக ஒப்புக் கொண்டு, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை, ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்ட அனைத்து தரப்பினருக்கும் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகளில் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ-11)


கடை விற்பனைக்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல. 123, கடை விற்பனைக்கு உண்டு.

Tel:-0777111400 (2643)

உங்கள் அன்பு உறவுகளுக்கு ... !

www.creativedesk.lk/shop

மேலதிக விபரங்களுக்கு :-

(2610) 077 777 8529


## பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளும் முடிபு சர்ச்சைக்குரியது

(கொழும்பு)

இலங்கையில் நடக்கவிருக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொள்வது என்ற பிரிட்டனின் முடிபு சர்ச்சைக்குரியது என்று பிரிட்டிஷ் துணைப் பிரதமரும் லிபரல் டெமொகிரடிக் கட்சியின் தலைவருமான நிக்கிளெக் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகளை மீறியிருக்கும் நிலையில் பிரிட்டனின் இப்படியான முடிபு சர்ச்சைக்குரியது என்று அவர் கூறியுள்ளார்.

மனித உரிமை மீறல்களை உரிய வகையில் கையாளாவிட்டால், அதற்கான பிரதிபலன்களை தலைநகர் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு நடக்கும் போது இலங்கை எதிர்கொண்டாக வேண்டும் என்று நிக்கிளெக கூறியுள்ளார்.

பிரதமர் டேவிட் கமரனுடன் நிக் கிளெக் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரனும் வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக்கும் நவம்பரில் நடக்கும் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கிறார்கள். கமரன் இந்த மாநாட்டில் கலந்துகொள்வார் என்று பிரதமர் அலுவலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கான கேள்வி நேரத்தின் போது கமரனுக்கு பதிலாக கேள்விகளுக்கு பதிலளித்த போதே துணைப் பிரதமர் நிக் கிளெக் இவ்வாறு கூறியுள்ளார்.

கேள்வி நேரத்தின்போது லிபரல் டெமொக்கிரட் கட்சியின் துணைத்தலைவரான சைமன் ஹியூஸ் அவர்கள், இலங்கையின் மனித உரிமை நிலைவரங்களின்படி, அங்கு நடக்கும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்வது என்ற பிரிட்டிஷ் பிரதமரின் முடிவை நான் ஆதரிக்க முடியாது என்று கூறினார்.

இலங்கையின் மோசமான ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு நாம் எப்படி பதிலளிக்க வேண்டும் என்று நீங்கள் எனக்கு கூறவேண்டும், அத்துடன் எதிர்காலத்தில் பொதுநலவாய அமைப்பு தாம் மனித உரிமைகளில் நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்று வெறுமனே கூறாது, மனித உரிமைகளுக்காக என்ன செய்தோம் என்பதைக் கூறுவதற்கு நாம் என்ன செய்யலாம் என்பது குறித்தும் நீங்கள் எமக்கு கூற வேண்டும் என்று பிரதமருக்கான கேள்வி நேரத்தில் அவர் மேலும் கேட்டார். (எ-11)

## நாட்டில் பிரிவினை...

வகையிலான ஓர் தீர்வுத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அரசியல்சாசனத்தில் அவ் வாறான ஓர் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

13ஆம் திருத்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்தினால் அது அதிகாரப் பகிர்வாக அமையாது. குறிப்பாக வட மாகாண சபைக்கு கூடுதல் அதிகாரம் கிட்டும் என வும், இதனால் நாட்டில் பிரிவினைவாதம் உருவாக வாய்ப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சகல இன மக்களையும் சமமாக மதிக்கக் கூடிய, சகல மக்களும் உரிமைகளையும் உறுதிப்படுத்தக் கூடிய வகையிலான ஓர் திருத்தச் சட்டத்தையே விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வடக்கில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த போதியளவு கால அவகாசம் காணப்பட்ட போதிலும் அரசாங்கம் அதனை உரிய முறையில் செய்யத் தவறியுள்ளது என அவா சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் வடக்கில் எதேச்சாதிகாரமாக செயற்பட்டு வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார். இராணுவ அதிகாரத்துடன் தமது காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பதாகவே வடக்கு மக்கள் கருதுகின்றனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சாதாரண போராளிகளை சிறையில் தடுத்து வைத்திருக்கும் இந்த அரசாங்கம் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு சொகுசு வாழ்க்கை அமைத்துக் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். குமரன் பத்மநாதனினால் கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதத்தைக் கொண்டு போராட்டம் நடத்திய இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர், எனினும், ஆயுதம் கொள்வனவு செய்த குமரன் பத்மநாதனுக்கு எவ்வித தண்டனைகளும் விதிக்கப்படவில்லை என அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (எ-11)


உடனடி வேலை வாய்ப்பு

டோகா / கட்டார்

- ✔ தச்சுத் தொழிலாளர்
- ✔ வெல்டர்
- ✔ பிளம்பர்
- ✔ மேசன்.
- ✔ எலெக்ரீசியன்
- ✔ உதவியாளர்
- ✔ J.C.B. இயக்குநர்
- ✔ பாரவூர்தி சாரதி

மேலும் பல வாய்ப்புக்கள்

- மாதாந்த சம்பளம் + மேலதிக நேரம்
- 50000 ரூபா வங்கிக் கடன் வசதி செய்து தரப்படும்
- தங்குமிடம், மருத்துவச் செலவு, போக்குவரத்து என்பன இலவசம்.

In Joint Venture With
ICS Study Overseas

Supra Foreign Employment Agency
No.77, Clock Tower Road,
Jaffna. 021 730 6000, 0773013060
சி-3333

Singapore Work Visa

Engineer 50 Nos Urgent

ICS Study Overseas

Supra Foreign Employment Agency சி-3343
No.77, Clock Tower Road.
Jaffna. 021 730 6000, 0773013060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.